பக்கங்கள்-16 | 26.டிசம்பர்.2021 | விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

news
THINAPPUYAL
திනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -365

# உயிரிலும் மேலான அல்லாஹ்வை இழிவுபடுத்திய ஞானசாரதேரருக்கு இறுதி எச்சரிக்கை!

முனாஜித் மௌலவியின் சிறப்பு நேர்காணல்



# தமிழ் தேசிய கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டால் தமிழரசு கட்சிக்கு ஆபத்து : தொடரும் சித்தாந்தம்



# டயஸ் போறாக்களை இலக்கு வைக்கும் கோட்டபாய – நிலாந்தன்



# வடகடலில் சீன வேடதாரிகள்

# உயிரிலும் மேலான அல்லாஹ்வை இழிவுபடுத்திய ஞானசார தேரருக்கு இறுதி எச்சரிக்கை – முனாஜித் மௌலவி

**கேள்வி : சமகால அரசியல் பார்வையிலே இன்று பூதாகாரமான சில விடயங்கள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. முதலாவது கொரோனா வைரஸ் அதனுடைய தாக்கம். அதன் பின்னர் ஜெனீவாவிலே தமிழ் மக்களினுடனான பிரச்சனைகள் தற்பொழுது ஞானசார தேரர் அவர்கள் பேசிய விடயமும் அது பாராளுமன்றத்திலே சென்றுகொண்டிருக்கின்றது. முனாஜித் மௌலவி அவர்களே இன்றைய சமகால அரசியலில் இன மத பேதங்களை கடந்து பார்க்கும் பொழுது ஒரு காலத்திலே கூறுவார்கள் புட்டுக்குழலுக்குள் தேங்காயை போல முஸ்லிம்களும் தமிழர்களும் ஒன்றாக வாழ்ந்தார்கள் ஆனால் இந்த போராட்டம் தான் எங்களை பிரித்து வைக்கின்றது என்றெல்லாம் கூறினார்கள். போராட்டத்துக்கு முன்னரான காலப்பகுதியிலும் பின்னரான காலப்பகுதியிலும் தமிழ் முஸ்லிம் ஒற்றுமையை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**


பதில் : பொதுவாகவே ஒற்றுமை என்பது காலத்தால் வேறுபட்டதல்ல. ஒற்றுமை உள்ளத்தோடு சம்பந்தப்பட்டது. கஷ்டம் நஷ்டம் பிரச்சனைகள் துன்பங்கள் சாதக பாதகங்கள் வருகின்ற பொழுது எல்லா நிலைகளிலும் பேணப்பட வேண்டியதொன்று ஒற்றுமை. பலர் தங்களுடைய தேவைகளுக்கு வேண்டி அரசியல், ஆன்மீகம், பிரதேசங்கள் ஏனைய விடயங்களை தங்களுடைய சுயநலத்திற்காக அவர்கள் பின்பற்றியதனுடைய பயன்படுத்தியதனுடைய விளைவு கி.மு. கி.பி என்று சொல்வதைப்போல யுத்தத்திற்கு முன் யுத்தத்தின் பின்பு ஒற்றுமை சீர்குலைந்திருப்பதை நாம் பார்க்கின்றோம். நல்லவர்கள் எப்பொழுதுமே என்ன பிரச்சனை தான் நடந்தாலும் ஒற்றுமையை பாதுகாக்க வேண்டி முயற்சிப்பார்கள் அதில் தமிழ் மக்கள் முஸ்லிம் மக்கள் சிங்கள மக்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருமே தவறு இழைத்திருக்கின்றார்கள் என்பது என்னுடைய கருத்து.

**கேள்வி : அந்த வகையிலே நான் பல முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் தொலைபேசியிலே தொடர்பு கொண்டிருந்தேன் நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கு இந்த சமகால பார்வையிலே அவர்கள் தயாராக இல்லை. வன்னி பாராளுமன்ற உறுப்பினராக இருக்கலாம் அல்லது கொழும்பாக இருக்கலாம் மட்டக்களப்பாக இருக்கலாம். காரணம் என்னவென்றால் இன்று கலகொட அத்தே ஞானசார தேரரை அரசாங்கத்திலே ஒரு முக்கிய புள்ளி என்ற அடிப்படையிலே பார்க்கின்ற நோக்கில் தான் இருக்கின்றது. இன்று சவுதி அரேபியாவை பொருத்தவரையில் அங்கிருக்கின்ற சட்டங்கள் அல்லது அரபு நாடுகளில் இருக்கின்ற சட்டங்கள் அதாவது அல்ஹாவை நிந்தித்தால் கழுத்து வெட்டப்பட வேண்டும் அவர் கொலை செய்யப்பட வேண்டும் என்பது அந்த நாட்டிலுள்ள சட்டங்களில் உள்ளது. அதிலும் ஓரளவேனும் இங்கும் சட்டங்கள் இருக்க வேண்டிய தேவை இருக்கின்றது அதாவது இங்கு மத ரீதியாக அல்ஹாவை கலகொட அத்தே ஞானசார தேரர் கிரு டிவியிலே சிங்கள பேரினவாதிகளினுடைய தொலைக்காட்சி அது இதில் அல்ஹா தான் ஈஸ்டர் குண்டு தாக்குதலுக்கு முழு காரணம் அல்லது அல்ஹா தான் கொலைகாரன் என்று கூறுகின்றதை மௌலவி என்ற வகையிலே நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

பதில் : வாய் திறந்தாலே எனக்கு கோபப்படுகின்ற உள்ளம் கொந்தளிக்கின்ற கேள்வி தான் இது. காரணம் என்னவென்றால் இந்த மனிதன் அவரை தேரர் என்றோ வணக்கத்தாளி என்றோ அவர் ஒரு சமூகத்தின் தலைவர் என்றோ ஒரு அரசியல்வாதி என்றோ வணக்கத்துக்குரியவர் என்றோ அந்த மஞ்சள் காவி உடையை உடுத்துக்கொண்டிருப்பதனால் அந்த தகைமையை எல்லாம் அவருக்கு கொடுக்க முடியாது. ஏனெனில் அவர் சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் அல்ல. ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அவர் தேர்தல் கேட்ட நேரத்தில் அவருடைய கட்சி வெற்றிபெற்றிருக்க வேண்டும். இவ்வளவு காலத்தில் கோட்டபாய ராஜபக்ச வருவதற்கு முன்னர், மகிந்த ராஜபக்ச இருந்த காலத்திற்கு முதல் இவர் போட்ட டிராமாக்கல், சத்தத்திற்கு அவர் இன்று நாட்டின் தளபதியாக இருந்திருக்க வேண்டியவர் சிங்கள மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் அல்லது இலங்கை மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தால். அவரை அதிகமாக பன்சாலையில் உள்ள காம்புல்மார்கள் கூட தற்பொழுது சொல்கின்றார்கள் இவருடைய பன்சாலைக்கு இவர் என்ன செய்கின்றார் என்றெல்லாம் அவர்கள் கேட்கின்ற அளவுக்கு அவர் செல்லா காசு ஒன்று. இரண்டாவது அல்ஹாவை பற்றி பேசுவதற்கு இவர் யார். பொதுவாகவே அல்ஹாவை பற்றி பேசினால் சவுதி அரேபியாவிலே கழுத்து அறுக்கப்பட்டு துண்டிக்கப்படுவார்கள் என்பது அங்கு இவ்வாறு பேசினால் நிச்சயமாக துண்டிக்கப்படும். என்னுடைய கருத்தின் படி அல்ஹாவை மட்டுமல்ல நீங்கள் வணக்குகின்ற தெய்வத்தை யார் பேசினாலும் இஸ்லாமியர்களின் சட்டம் பிறருடைய மார்க்கத்தை பிறருடைய கடவுளை பிறருடைய கடவுளின் தூதர்களை பிறருடைய பூசாரிமார்களை பாதர்மார்களை யாரை கொலை செய்தாலும் யாரை நிந்தித்தாலும் அவரை நூற்றுக்கு நூறு வீதம் தண்டிக்கப்பட வேண்டும் என்பது தான் என்னுடைய வாதம். அந்த வகையில் இவர் அல்ஹாவை பற்றி சொன்ன அந்த கூற்று அது தண்டிக்கப்பட வேண்டியது மட்டுமல்ல உடனடியாக இந்த நாட்டின் தலைமை சட்டங்களை சரியான வகையிலே மதித்து அனைவருக்கும் சரியான நீதியை நிலைநாட்டுகின்ற ஒரு அரசாங்கமாக இருந்திருந்தால் இன்று உடனடியாக அதற்கு முடிவெடுத்திருக்க வேண்டும்.

**கேள்வி : இந்த கிரு தொலைக்காட்சியிலே அவர் இதை கூறி இரண்டு மூன்று நாட்களின் பின்னர் தான் இந்த பிரச்சனை வந்தது. ஆனால் இதை இந்த நாட்டினுடைய நீதியரசராக இருக்கின்ற அலிசப்ரி அவர்களும் ஒரு முஸ்லிம் தான். இவருக்கு தெரியாதா அவர் அல்ஹாவை நிந்திக்கின்றார் இவருக்கு அடுக்ககட்டமாக எதை கொடுக்க வேண்டும் என்பது அல்லது இதனோடு பல்வேறுபட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி சார்ந்து இருக்கின்றார்களே இவர்கள் அனைவரும் மௌனம் காக்கின்ற பொழுது சாணக்கியன் மட்டும் பேசியிருக்கின்றார். அவரை நான் அல்ஹாவிற்காக பேசியதை அல்லது முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்ததை பிழை என்று கூறவில்லை. ஆனாலும் பாராளுமன்றிலே பிரதிபலிக்கின்ற இவர்களும், நீதி அமைச்சரும் இருக்கின்ற பொழுது இவரை சரியான வழியிலே கண்டிக்காதது அதன் பின்னர் தற்பொழுது எல்லோரும் நாங்கள் இவருக்கு வழக்கு போடுகின்றோம் என்பதுமான நடவடிக்கை எவ்வளவு தூரம் தவறான விடயம்?**

பதில் : ஞானசார தேரர் பேசிய கருத்திற்கு கேள்விபட்ட உடனேயே கொந்தளித்துக்கொண்டு எந்தளவுக்கு உச்சகட்ட எதிர்ப்பை தெரிவித்து பேச வேண்டுமோ அதை செய்ய வேண்டியவர்கள் கடமைப்பட்டவர்கள் அல்ஹாவை கடவுளாக நினைத்துக்கொண்டு அதை பின்பற்றிக்கொண்டிருக்கின்ற சாதாரண மனிதர்கள் முதல் நான் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே செய்திருக்க வேண்டும். நீதியமைச்சரும் அதை செய்திருக்க வேண்டும். நீதியமைச்சர் அல்லது அந்த அரசோடு ஒட்டிக்கொண்டிருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே பாவம். அதாவது மலடியை போய் பிள்ளை பெறும்படி சொன்னால் எப்படி முடியும். அலிசப்ரி என்னும் நீதியமைச்சர் மகிந்தவின் குடும்பத்திற்குள் வென்றவர். சமூக ரீதியாக இவர்கள் அங்கீகாரம் கொடுக்கப்பட்டவர்கள் அல்ல. எனவே அவர்களுக்கு இந்த உணர்வு இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை ஆனால் கதைக்க வேண்டியவர். இதே நேரத்தில் ரிஷாட் பதியூதின் வெளியில் இருந்திருந்தால் கண்டிப்பாக கதைத்திருப்பார் என்பது என்னுடைய வாதம். நான் இங்கு ரிஷாட் பதியூதினை வக்காளத்து வாங்கவில்லை. அவர் பல இடங்களிலும் பல



கருத்துக்களிலும் அவர் கதைத்திருக்கின்றார். அவர் தற்பொழுது உள்ளே இருக்கின்றார் எனவே அதை விடுவோம். இந்த நேரத்தில் சாணக்கியன் ஐயா கதைத்திருக்கின்றார் அல்லவா அவர் வெறுமனே முஸ்லிம்களுக்கு துன்பம் நடந்தால் மட்டும் கதைப்பவர் அல்ல. சாணக்கியன் ஓட்டுக்காக கதைத்தார் என்கின்றார்கள் அது பிழை. நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் நாட்டு மக்களின் நலிவடைந்த பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் சாணக்கியன் கதைக்கின்றார். எனக்கு சாணக்கியனை தெரியாது முதல் முதலாக அவர் பாராளுமன்றில் கதைத்திருந்தார். முதலாவது அவர் கதைத்த உடனே நான் பாராட்டினேன் சாணக்கியனுக்கு சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சாடினார்கள். காரணம் என்னவென்று கேட்டால் அவருடைய வருகை அவருடைய வளர்ச்சி இவர்களை பாதிக்கும் என்று நினைத்தார்கள். சாணக்கியன் ஐயா ஒரு துணிந்த மறத்தமிழன் ஏழைகளுக்காகவும் அநாதைகளுக்காகவும் குரல் கொடுப்பவர் பிழை எங்கிருந்தாலும் அவர் பேசுவார் பேச வேண்டும்.

**கேள்வி : கடந்த காலத்திலே அவர் இராணுவ புலனாய்வோடு இணைந்து செயற்பட்ட ஒருவர் அவுஸ்திரேலியாவிலே இருந்தவர். அவர் சிறிலங்கா சுதந்திர கட்சியினூடாகத் தான் அவரினுடைய பயணம் பயணித்தது. பிள்ளையான் அன்று கோட்டபாய ராஜபக்சவினுடன் நேவியினுடன் இணைந்திருந்த ஒருவர். அவருடன் தான் வந்து இணைந்திருந்தார். அவருடைய இரகசிய முகாம்களில்கூட சாணக்கியன் இருந்து பேசிய புகைப்படங்கள் கூட வெளியிடப்பட்டிருந்தது. சாணக்கியனுக்கு ஆசனங்கள் வழங்கப்படக்கூடாது என்று பலர் கூறிய நிலையிலும் திடீரென த.தே கூட்டமைப்பிலே கிழக்கு மாகாணத்தில் வைத்து ஆசனம் வழங்கப்பட்டது. அப்பொழுது மாவை சேனாதிராஜா உட்பட பலரும் எம்மிடமும் சாணக்கியன் தொடர்பாக பல கேள்விகளை கேட்டிருந்தார்கள். அப்பொழுது நாங்கள் கூறினோம் வாக்கு வங்கி தேவையாகவிருந்தால் சாணக்கியனை தெரிவுசெய்ய முடியும்.**

**ஆனால் இவர் இப்படிப்பட்ட ஒரு இடத்தில் இருந்து வருகின்றார் இவர் நாளை இலங்கையிலே ஒரு குழப்பத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற சூழல் உருவாகும் என்ற விடயத்தையும் கூறியிருந்தோம். அப்படியிருந்தும் அவருக்கு ஆசனம் வழங்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தை பிரதிபலிக்கின்ற பாராளுமன்ற உறுப்பனர் தான் சாணக்கியன். 2000 ஆண்டு காலப்பகுதிகளில் நடைபெற்ற அல்லது முஸ்லிம் சமூகத்தை சார்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட முள்ளிவாய்க்கால் பிரச்சனை நடக்கின்ற பொழுதோ அல்லது ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் ஈண்டபொழுதோ யாரும் பாராளுமன்றத்தில் கூட குரல் கொடுக்கவில்லை. இவ்வாறிருக்கின்ற பொழுது சாணக்கியன் தன்னுடைய வாக்கு வங்கியை முஸ்லிம் மக்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற ஒரு நப்பாசையில் அவர் பேசலாம் கொள்ளலாம் அது அவருடைய விருப்பம். நீங்கள் இன்று முஸ்லிம்களால் நடத்தப்பட்ட தமிழீழ படுகொலைகளை அவரிடம் சுட்டிக்காட்டி கேட்டோம் இதற்கான ஒரு தீர்வை நீங்கள் கண்டுவிட்டு முஸ்லிம்களுக்காக குரல் கொடுங்கள் என்று. இது தவறு என்கின்றீர்களா?**

பதில் : நேற்று வரை என்று பார்ப்போமானால் சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவாளராகவோ அல்லது புலனாய்வு துறையில் இருந்த ஒருவர் சாணக்கியன். அவர் இன்றிலிருந்து நல்லதொரு பயணத்தை நோக்கி செல்வது பிழையா, என்னுடைய பார்வையில் நான் அதை சரிகாண்கின்றேன். கடந்த காலத்தில் அவர் சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் இருந்திருக்கலாம் என்னிடம் பல தடவைகள் கூறியிருக்கின்றார் நான் சிங்கள மக்களுடன் இணைந்து நல்லதொரு நோக்கோடு சென்றேன் எதையாவது செய்ய வேண்டும் என்று ஆனால் அது சாத்தியப்படவில்லை. எனவே இதற்குள் இருந்து கொண்டு என்னுடைய சமுகத்திற்கு நல்லது செய்ய முடியாது என்ற காரணத்தினால் என்னுடைய இனம் சார்ந்த ஒரு கட்சிக்குள் இருந்து கொண்டு நான் இவர்களை எதிர்த்தே அரசியலை செய்ய வேண்டியதொரு நிலை இருக்கின்றது நான் அப்படித்தான் செய்யப்போகின்றேன் அதில் எனக்கு கீழிருக்கின்ற சிறுபான்மையினரை நசுக்கப்படுகின்ற பொழுது அவர்களுக்காகவும் நான் குரல் கொடுப்பேன் காரணம் தமிழ் முஸ்லிம் என பிரித்து பார்ப்பதற்கு எனக்கு தெரியாது. நான் பார்க்க மாட்டேன் என்பது தற்பொழுது அவருடைய கொள்கை வருங்காலங்களில் அது மாறலாம் நமக்கு தெரியாது. ஆனால் அதை நான் நம்புகின்றேன். சாணக்கியன் ஐயா என்று சொல்லக்கூடியவர் இலங்கையில் சிங்கள மக்கள் தான் பாதிக்கப்பட்டாலும் சிங்களவர்களில் வெறி பிடித்தவர்கள் அல்ல நல்ல மக்கள் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்காகவும் சாணக்கியன் 200க்கும் மேற்பட்டவர்கள் பாராளுமன்றத்திலே இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் இவர் குரல் கொடுப்பார் என்று இருக்கின்றது. இரண்டாவது விடயம் முள்ளிவாய்காலிலும் ஏனைய இடங்களிலும் தமிழ் மக்கள் கொத்து கொத்தாக கொல்லப்படுகின்ற பொழுது இந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் குரல் கொடுக்கவில்லை என்று கேட்டீர்கள். உண்மை தான் அவர்கள் குரல் கொடுக்க மாட்டார்கள். ஏனென்று தெரியுமா தேர்தல் காலங்களில் அரசை காரசாரமாக பேசிவிட்டு வாக்குகளை சேகரித்து வந்துவிட்டு பின்னர் அபிவிருத்தி என்று வருகின்ற பொழுது சரணாகதியடைந்து காலிலே விழுகின்ற ஹிஸ்புல்லாவோ. அதாவுல்லாவோ. ஹரிசோ அல்லது ரவூப் ஹக்கீமோ ரிஷாட் பதியூதினோ ஒரு நாளும் கொள்கை பேசுகின்றவர்கள் அல்ல. இலங்கையில் உள்ள தமிழ் பேசுகின்ற அரசியல்வாதிகளில் அல்ஹாவை இறைவனாக ஏற்று முகமது எம்பியை தூதுவராக ஏற்றிருக்கின்றார்களே தமிழர்கள் முஸ்லிம்கள் என்று நீங்கள் அடிக்கடி சொல்லுவீர்களே இவர்கள் அரசியலுக்கு பொருத்தமில்லாதவர்கள் காரணம் அரசியல்வாதிகள் என்றால் ஒரு கொள்கை இருக்க வேண்டும். இலட்சியம் இருக்க வேண்டும். அரசாங்கத்தை எதிர்த்து வாக்குகளை கேட்கின்றார்கள் எந்த அரசாங்கத்தை பேசினார்களோ அவர்கள் வென்றதும் அபிவிருத்திக்காக போய் சேர்கின்றார்கள்.

தொடரும்...

நேர்காணல் : இரணியன்

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

# பொருட்களின் விலையேற்றமும், பொருளாதார வீழ்ச்சியும்

கடந்த காலங்களைவிட இலங்கை நாடானது கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு செய்வதறியாது பிற நாடுகளிடம் கையேந்துவதைத் தவிர வேறுவழியில்லை என்கிற அளவுக்கு கொவிட் வைரசின் தாக்கத்தின் பின்னரான சூழல் மாற்றம் பெற்றுள்ளது. சீனாவால் பரப்பப்பட்டதாக இதுவரை கூறப்படும் கொவிட் வைரசானது இன்று பல திரிபுகளாக நாடுகளைத் தாக்கி வருகின்றது. இதனால் உலக நாடுகள் பொருளாதார ரீதியாக கடும் சரிவினைச் சந்தித்துள்ளன. எனினும் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வெகுவாக பாதிப்பினை எதிர்கொள்ளவேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதேவேளை உலகை உலுக்கி வருகிற ஒமிக்ரான் வைரஸ். தென் ஆபிரிக்காவில் கடந்த மாதம் 24 ஆம் திகதி முதன் முதலாக கண்டறியப்பட்டது. இந்த ஒரு மாத காலத்தில் அந்த வைரஸ் 106 நாடுகளில் பரவி உள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. ஐரோப்பிய நாடுகள் இவ் வைரசினால் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றன. என்றுமில்லாதவாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இவ் அரசினால் நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. விலையேற்றங்களால் மக்கள் திண்டாடும் நிலை உருவாகியுள்ளதுடன். இந்நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்வதைத் தவிர வேறுவழியில்லை என்கிற நிலைக்கு மக்கள் வந்துள்ளனர். நாட்டில் பஞ்சம் ஏற்படும் அளவிற்கு நிலைமைகள் மோசமாகியுள்ளது. நாட்டின் உற்பத்திகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன். அரிசிக்கான கேள்வி அதிகரித்துள்ளது. உர இறக்குமதித் தடையால் பல விவசாயிகள் நெல் உற்பத்தியைக் கைவிட்டுள்ளதுடன் விளைச்சலிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வெளிநாடுகளில் இருந்து நாட்டிற்குத் தேவையான அரிசி மற்றும் இதரப் பொருட்களை இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் இருக்கும் அரசு. டொலர் கையிருப்பில் இல்லாமையினால் அதனையும் செய்ய முடியாத நிலையில். நாட்டின் அரசியலுக்குள் ஸ்திரத்தன்மையும் நிலவ ஆரம்பித்துள்ளது.

மக்கள் சமையல் எரிவாயுவிற்காக வீதிகளில் காத்திருக்கவேண்டிய நிலை. உச்சக்கட்ட விலையேற்றத்தால் கையறு நிலையில் மக்கள். அரசின் மீதான அதிருப்தி. பால்மாவுக்கான தட்டுப்பாடு. எரிபொருட்களின் திடீர் விலையேற்றம். மரக்கறிகளின் விலையேற்றம் என பிரச்சினைகள் நாட்டில் பூதாகரமாகத் தலையெடுத்துள்ளது. மாறி மாறி இலங்கையை ஆட்சிசெய்த ஆட்சியாளர்களின் முறையற்ற திட்டங்களாலும், பணவிரயம் ஏற்படுத்தப்பட்டமையினாலும், ஊழல் பிரச்சினைகளாலும், உற்பத்தியில் ஏற்பட்ட பற்றாக்குறைகளாலும், முறையாக செயற்படுத்தப்படாத வேலைத்திட்டங்களாலும் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கடன்களை வாங்கிக்குவிக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இவற்றை உடனடியாக சரிசெய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான இராணுவ அரசுக்கு முடியவில்லை என்பதுவே உண்மை. எனினும். தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வழிமுறைகள் 2021 இறுதியளவில் அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 3 பில்லியனிற்கு மேலாகக் காணப்படுவதனை உறுதிப்படுத்தும் என்பதனை இலங்கை மத்திய வங்கியானது அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் கூறியுள்ளது. கோவிட் வைரசின் தாக்கத்திற்கு மத்தியிலும் நாட்டை மீளக்கட்டியெழுப்பவேண்டிய தேவை அரசுக்கு உண்டு. எனினும் குடும்ப ஆட்சியும் இராணுவத் தலையீடுகளும் நாட்டு மக்களை சினங்கொள்ளவைத்துள்ளது. ஆட்சி மாற்றம் குறித்துப் பேசும் எதிர்க்கட்சிகள் முறையான மாற்றுவழிகளை முன்வைக்கவும் இல்லை. ஆட்சிமாற்றத்தால் மாத்திரம் இந்நாட்டின் பொருளாதாரத்தை உடனடியாக மீளக்கட்டியெழுப்பிவிட முடியாது. எனினும் அதற்குரிய வேலைத்திட்டங்களை முறையாக வெகுவாக படிப்படியாக ஆரம்பிக்க முடியும். நாட்டின் உற்பத்திக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். சரியான திட்டமிடல்களும் செயற்பாடுகளுமே ஒரு நாட்டின் அபிவிருத்திக்குத் தேவை. எனவே அரசு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான விடயங்களை கட்டியெழுப்புவதுடன். எதிர்கால இலங்கைக்குத் தேவையான செயற்பாடுகளை துரிதகதியில் நடைமுறைப்படுத்தவேண்டும்.

170

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்



பிரதேசத்தின் தரையமைப்பு. வளரிகள். இரவின் இருள் போன்றவற்றைப் பயன்படுத்திக் கெரில்லாக்கள் தங்களது நகர்வை அவதானமாக உருமறைக்கவேண்டும். திறந்தவெளியில் தீ மூட்ட அனுமதிக்கக்கூடாது. நில அடுப்பைக் கொண்டிருக்கவேண்டும். பெரியளவில் புகை வெளியேறுவதை அனுமதிக்கக்கூடாது. ஆனால் ஜேர்மனியர்களைத் திசைதிருப்பல் நடவடிக்கைக்குள் அகப்படச் செய்வதற்காக. படைப்பிரிவு இருக்கின்ற இடத்திலிருந்து வெறு பக்கத்தில் திறந்த வெளியில் தீயை மூட்டிவிட வேண்டும். ஆகாய அவதானிப்பிலிருந்து காக்கின்ற உருமறைப்பு ஒழுங்குவிதிகளை ஒவ்வொரு கெரில்லாவும் கடைப்பிடிக்கவேண்டும். அத்துடன். பாசிச விமானங்களை இயந்திரச் சுடுகலன்களால் சுட்டுத் தாக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

கெரில்லாப் படைப்பிரிவுகளுடனான சமரில் பாசிஸ்டுக்களை வழிநடத்திய பொதுவான விதிமுறைகளை மாத்திரமே நாங்கள் இங்கே தந்துள்ளோம். ஆனால். தனியான ஜேர்மனிய டிவிசன்களில் தமக்கேயுரிய சிறப்பான உத்திகளும் தற்காப்பை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளும் உருவாக்கப்பட்டிருக்கலாம். கெரில்லாக்கள் இவற்றை அவதானமாக ஆராயவேண்டும். அத்துடன். எதிரியின் தந்திரோபாயத்தை முற்கூட்டியே விளங்கிக்கொள்ளவும் வேண்டும். கெரில்லாக்களுடனும் கிளர்ச்சி யாளர்களுடனுமான சோவியத் நாட்டினது போர் அனுபவம் பக்தானவ் வெ.என்.மற்றும் ஏனையோர் பாசிச ஜேர்மனியையும் இராணுவ ஆதிக்க யப்பானையும் வென்றபின். சோவியத் நாடு நீண்டகாலமாக உள்நாட்டுப் போரரங்கில் கொடிய. களைப்பைஏற்படுத்துகின்றபோரை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. கிட்டத்தட்ட மேற்குப் பகுதியிலுள்ள சகல எல்லைப் பரப்பெங்கிலும் ஆரம்பமான நாடகம். 1930 - 1940 காலப்பகுதிகளில் பால்டிக் குடியரசுகள். மேற்கு பைலோரசியா. மேற்கு உக்ரேன் ஆகியன சோவியத்துடன் இணையும் காலகட்டத்தில் தவிர்க்க முடியாததாக இருந்தது. ஆனாலும் இது. அப்போது ஆரம்பமான உயர்மட்ட ஆயுதப்போரினால் (சோவியத் ரசியாவிற்கும் ஜேர்மனிக்கும் இடையிலான யுத்தத்தினால்) மழுங்கடிக்கப்பட்டது.

இச்சம்பவங்களின் பொதுவான பண்புகளை மாத்திரமே குறிப்பிடவேண்டும். அவ்வகையில், மேற்குறித்த சகல பிரதேசங்களிலும் நடைபெற்ற சகல எழுச்சிகளிலும் பூகோள மற்றும் செயற்பாட்டு மையம் இருக்கவில்லை. குறித்த ஒரு பிரதேசத்தில் எழுச்சிகொண்ட மக்களிடமும் அவர்களது இராணுவ அரசியல் தலைவர்களிடமும் திடத்தன்மை அவதானிக்கப்படவில்லை. மிகத் தீவிரமான ஆயுதப் போராட்டத்தைக் கொண்ட பிரதேசங்கள் எதுவும் இருக்கவில்லை. இவற்றிற்குப் பதிலாகப் பெரியளவில் விரிவான எதிர்ப்புக்கள் ஆங்காங்கே தோற்றம் கொண்டமையே அவதானிக்கக்கூடியதாக இருந்தது. கூடுதலானவற்றுடன் ஒப்பிடுகையில், இவ்வாறான எதிர்ப்புக்கள் இன. மத அடிப்படையிலேயே தோற்றம் கொண்டிருந்தன. இதுவே எதிர்ப்பிற்குக் கூடிய முக்கியத்துவத்தையும் மேலதிக திடத்தையும் கொடுத்தது. கிளர்ச்சிப் படைகளுடன் போரிடுவதற்காகப் பிரதானமாகச் சட்ட அமுலாக்கல் படைகளுடன் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட அரச பாதுகாப்புச் சபைப் படைகளும் இடையிடையே செஞ்சேனைப் படைகளும் பயன்படுத்தப்பட்டன.

பிணக்குகள் தோன்றிய சகல இடங்களிலும் அதனது ஆரம்பமும் முடிவும் ஒரேமாதிரியாகவே இருந்தன. ஆனால் எங்கேயும் கிளர்ச்சியாளர்களைத் தீர்க்கமாகத் தோற்கடிக்க முடியவில்லை. அதேநேரத்தில். எந்தவொரு கெரில்லா அமைப்பும் இராணுவ வெற்றியை எட்டும் நோக்கத்தைப் பிரதானமாகக் கொண்டிருக்கவில்லை. எதிர்ப்பின் மூலோபாயம் பகைமை கொண்ட மொஸ்கோவின் வெளிவிவகாரப் பிரிவினர் பிணக்கில் தலையிடுவதை எதிர்பார்க்கின்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆகவே தான். பழைய கெரில்லாப் போர்முறைகளும் நாசகாரப் பயங்கரவாதச் செயற்பாடுகளும் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டன. லித்துவேனிய காட்டுச் சகோதரர்களுடனான ஜி போர் பொதுவான பண்புகள் தவிர. ஒவ்வொரு தேசியக் கிளர்ச்சி அமைப்பும் தமக்கேயுரிய சிறப்பியல்புகளையும் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக. 1944 - 1952 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் லித்துவேனிய எதிர்ப்பியக்கம் மூன்று பால்டிக் குடியரசுகளிலும் மிகவும் பிரமாண்டமான தாகவும் ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் கொடியதாகவும் இருந்தது.

எதிரப்பியக்கத்தின் முதலாவது நடவடிக்கையாக. 1940 ஆம் ஆண்டு யூலை மாதம் லித்துவேனியாவில் மக்கள் பாராளுமன்றத்திற்கான தேர்தலைப் பகிஸ்கரிப்புச் செய்தமை விளங்குகின்றது. புதிய அரசியல் ஒழுங்கமைப்பை மக்கள் பாரியளவில் ஏற்றுக்கொள்ளாமையை இப்பகிஸ்கரிப்பு உறுதிப்படுத்தியது. ஏற்கனவே இக்காலப்பகுதியில், ஆயுதப்போரைத் தமது பிரதான நோக்கமாகக் கொண்ட மறைமுகக் குழுக்களின் உருவாக்கம் தொடங்கப்பட்டிருந்தது. சோவியத் ரசியா மீது ஜேர்மனி தாக்குதலைத் தொடங்கியபின். 1941 ஆம் ஆண்டு யூன் மாதம் சோவியத் படைகளின் பின்புலத்தில் அவர்கள் எழுச்சியைத் தோற்றுவித்து. கூடுதலான நகரங்களிலும் பிற மக்கள் வாழ்விடங்களிலும் தமது அதிகாரத்தை நிறுவினர்.

சோவியத்திற்கு எதிரான இந்த முதலாவது பாரிய எழுச்சி போருக்குப் பின்னான கெரில்லா அமைப்பின் தலைமைத்துவக் குழுவின் தோற்றத்திற்குத் துணைபுரிந்ததுடன். ஆளும் தரப்பினருடனான குறித்தளவு போராட்ட அனுபவத்தையும் தந்தது. ஜேர்மனியப் படைகளால் பால்டிக் குடியரசுகள் ஆக்கிரமிக்கப்பட்ட காலப்பகுதியில் லித்துவேனிய மக்களின் தேசிய அரசுரிமைக்கான போராட்டம் வெள்வேறு முறைகளில் தொடர்ந்துகொண்டிருந்தது. இதற்குப் போரின் முதலாவது ஆண்டுப் பகுதியில் ஜேர்மனிய இராணுவத்தில் சேர்வதற்கு லித்துவேனிய இளையோர்கள் மறுத்தமை பிரதான சான்றாகும். ஆனால். 1943 ஆம் ஆண்டிலிருந்து போரின் போக்கு கணிசமாக ஜேர்மனியர்களுக்குச் சாதகமற்றதாக மாறத்தொடங்கியபோது. சில படைப்பிரிவுகள் பின்வாங்குகின்ற ஜேர்மனியப் படைகளிடமிருந்து ஆயுதங்களையும் பொருட்களையும் கைப்பற்றத் தொடங்கியதுடன். நெருங்கி வந்துகொண்டிருக்கின்ற சோவியத் படைகளுக்கெதிராகக் கெரில்லா நடவடிக்கையில் இறங்கவும் தயாராகத் தொடங்கின. 1944 ஆம் ஆண்டின் கோடை காலத்தில். மூன்றாவதுபைலோரசியமுன்னணிப்படை லித்துவேனிய நிலப்பரப்பை ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து கிட்டத்தட்டப் பூரணமாகவே விடுவித்தது. இதன் மூலம் கிட்டத்தட்ட போருக்கு முன்னான நிலைமை மீள உருவாக்கப்பட்டது. மீளப் பெரியளவிலான கைதுகளையும் நாடு கடத்தல்களையும் எதிர்கொள்வதைவிடக் கையில் ஆயுதம் ஏந்தி மடிவது சிறந்ததெனக் கருதிய கணிசமானளவு மக்கள் இந்த நிலைமையைப் பொறுத்துக்கொள்ளவில்லை.

லித்துவேனியர்கள் கிட்லரின் ஆட்களுடன் ஒத்துழைத்ததற்குப் பதிலான இவ்வாறான கைதுகளும் நாடு கடத்தல்களும் முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கையாக இருந்தன. 1944 ஆம் ஆண்டு செஞ்சேனைக்கான ஆட்சேர்ப்பைப் பற்றி அறிவிப்புச் செய்தமையும் கெரில்லாக்களின் எண்ணிக்கை அதிகரிக்க வழி செய்தது. கொள்கை விளக்கங்களும் கெரில்லா அமைப்பு விரிவாக்கம் பெறுவதற்கான முக்கிய பங்கை வகித்தன.

கெரில்லாக்களை வழிநடத்துவதற்கான முதுகெலும்பாக இராணுவ வட்டத்தைச் சேர்ந்தவர்களும் முதலாளித்துவ வாழ்க்கை, முதலாளித்துவப் பண்பாட்டுக் கொள்கை ஆகியனவற்றால் ஈர்க்கப்பட்ட பழைய லித்துவேனிய அறிவாளிகள் வர்க்கத்தினருமே இருந்தார்கள். அவர்கள் தேசிய உணர்வுகள் புண்படுத்தப்படுவதைக் கூர்மையாகப் புரிந்துகொண்டதுடன். தீவிர தேசியவாதத்தைப் பரப்புபவர்களாகவும் இருந்தார்கள். அத்துடன், சோவியத் அதிகாரத் தரப்பினருடன் போரிடுவதனை அவர்கள் லித்துவேனியச் சுதந்திரப் போராட்டமாக மாத்திரமன்றி. கடவுளைக் கொண்டிராதவர்களுடனும் கத்தோலிக்க மதத்தின் எதிரிகளுடனுமான போராட்டமாகவும் கருதினர்.

தொடர்வான்....
நெற்றிபொறியன்

# தமிழ் தேசிய கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டால் தமிழரசு கட்சிக்கு ஆபத்து : தொடரும் சித்தாந்தம்

இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ் கட்சிகள் ஒன்றிணைவதற்கான ஒரு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்கள். அதில் குறிப்பாக 13 ஆம் திருத்த சட்டம் சமஷ்டி குறித்து ஆராயப்பட்டுவந்துள்ள நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் தலைவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். கட்சிகளின் ஒரு சாராரின் கருத்து என்னவெனில் 13 க்கு அப்பால் சென்று செயற்படலாம் என்பதே.

தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பதன் மூலமே தமக்கான ஆதரவை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே இவர்களின் பிரதான நோக்கம். இத்தகைய சூழலில் ரெலோ, புளொட், ஈபி.ஆர்.எல்.எப், விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, ஏனைய இதர தமிழ் கட்சிகளும் இக்கூட்டத்தில் பிரசங்கமாகியிருந்தன. தமிழரசுக் கட்சியை ஓரங்கட்டி ஆயுத போராட்ட கட்சிகள் ஒன்றிணைந்து மக்கள் மத்தியில் வெற்றியீட்டுவது என்பது பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டிவரும். தொடர்ந்தும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்கள் அதன் சின்னத்தை மாற்றியமைத்து பரீட்சியமாவதற்கு பல ஆண்டுகள் தேவைப்படும். இதற்கிடையில் தமிழ் கட்சிகளின் ஒன்றிணைவுக்கு அல்லது பொறிமுறைக்கு முஸ்லிம் கட்சிகளையும் இணைத்து செயற்படுவது என்பது கத்தியில் நடப்பது போன்ற ஒரு செயலாகும். எந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் கழுத்தறுப்பார்கள் என்பது கூறமுடியாது.

கடந்த 30 ஆண்டு காலகட்டத்தில் தமிழ் கட்சிகளுடன் ஒன்றிணைந்து அல்லது தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து செயற்படாத முஸ்லிம் தரப்புக்கள் இன்று தமது தரப்பிற்கு அரசாங்கத்தினால் இடம்பெறுகின்ற அநீதிகளை களைவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடைய உதவி தேவைப்படுகின்றது என்பதேயாகும். அதன் காரணத்தினால் தான் இன்று த.தே.கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ரெலோ கட்சியின் அழைப்பை ஏற்று கொழும்பு குயின்ஸ் ஹோட்டலில் இராஜதந்திர கூட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்றது. இவ்வாறு இவர்கள் செயற்படுவது என்பது அரசாங்கம் ஒரு திகிலடையும் என்ற நோக்கத்திற்காகவும் அல்லது தமது தரப்பை அரசாங்கம் அழைத்து பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்ற ஒரு அழுத்தமாகவும் இருக்கலாம். ஆனால் நாம் எந்த அதிர்வலைகளுக்கும் அடிபணிந்து செயற்படப்போவதில்லை என்பது அரசாங்கத்தின் இன்றைய நிலைப்பாடாகும். ஆனாலும் இந்தியா, சீனா பிரச்சனைகள் வலுவடைந்து வருகின்றது. கடந்த காலங்களில் எடுத்துக்கொண்டால் இந்தியாவின் தலையீடு கூடுதலாக இலங்கையில் இருந்தது. இலங்கை அரசாங்கம் பொருளாதார பரீட்சையை எதிர்நோக்குகின்ற சூழ்நிலையில் எல்லாம் இந்திய அரசு கைகொடுத்தது என்பதே வரலாறு. இலங்கை அரசானது தற்பொழுது புதிதாக நட்பு நாடாக சீனாவை இணைத்துக்கொண்டதன் விளைவு பொருளாதாரத்தில் இருந்து மீண்டுவரமுடியாத ஒரு சூழ்நிலை. ஆகவே இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்வதன் ஊடாக பாரிய வெற்றியை தமிழ் தரப்பு அடைய முடியும். பரவலாக த தே.கூட்டமைப்பு ஏன் பதிவு செய்யப்படவில்லை என்ற கேள்வி எழுப்பப்படுகின்ற நிலையில் அது பதிவு செய்யப்பட்டால் நினைத்தது போன்று செயற்பட முடியாது. சூழற்சி முறையிலான கட்சி தலைமைப் பதவி வழங்குவதன் ஊடாக தமிழரசுக்கட்சியின் அனைத்து கோட்டைகளும் தகர்த்தப்பட்டுவிடும் என்ற ஒரு அச்சமும் கூட இவர்களுக்கு உள்ளது. ஆனால் மக்களை பொருத்தவரையில் ஒன்றிணைந்த ஒரு செயற்பாட்டையே விரும்புகின்றார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் த.தே.கூட்டமைப்பு ஒன்றிணைவை சிறந்த முறையில் வழிநடத்தினார்கள் என்பதே யதார்த்தபூர்வமான உண்மை.

அக்காலகட்டத்தில் 22 ஆசனங்களை தம்வசம் வைத்திருந்தார்கள். குறித்த 22 ஆசனம் தற்பொழுது சரியரைவாசியாக வீழ்ச்சி கண்டுள்ளது. இதற்கு காரணம் தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகித்த பாராளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளால் நியமிக்கப்பட்ட சிவநாதன் கிஷோர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், கனகரட்னம், வெள்ளிமலை இப்படிப்பட்டவர்கள் விடுதலைப்புலிகளின் ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இவர்களுக்கான ஆசனம் த.தே.கூ தலைவர் இரா.சம்பந்தனால் வழங்கப்படவில்லை. இதில் குறிப்பாக தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரியும் ஓரங்கட்டப்பட்டார். தமிழ் தேசியத்தின் பால் குரல் கொடுத்தவர்கள் ஓரங்கட்டப்பட்டதன் விளைவு அடுத்த தேர்தலில் த.தே.கூட்மைப்பு 18 ஆசனங்களையே கைப்பற்றியிருந்தது. அதன் பின்னர் 15 10 என்று படிப்படியாக குறைந்து சென்றது. எதிர்வரும் ஒரு தேர்தல் இடம்பெறுமாக இருந்தால் த.தே.கூட்டமைப்பு 5 அல்லது 6 ஆசனங்களை பெறும் என்பது சந்தேகமே.

ஆகவே அரச தரப்பு த.தே.கூட்டமைப்பை பிளவுபடுத்துவதற்கும் அல்லது கட்சியை பதிவு செய்வதற்கும் இதனை செயற்படுத்த கூடாத வகையில் குழப்பங்களை விளைவித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான குழப்பங்களை விளைவித்தால் மட்டுமே தமது அரசியலை திறம்பட நகர்த்த முடியும் என்பதே இவர்களுடைய நோக்கம். வடக்கிலும் கிழக்கிலும் பாரிய வெற்றியீட்டிய த.தே.கூட்டமைப்பு தொடர்ந்தும் இவ்வாறே செயற்பட்டால் அது அரசாங்கத்தின் வளர்ச்சியையும் தேசிய பாதுகாப்பையும்



கேள்விக்குறியாக்கிவிடும் என்பது அரசதரப்பின் வாதம். மற்றுமொரு விடயமாக தமிழ் அரசு கட்சி என்றால் அது ஒரு தனி இராட்சியம் என்றே அரசாங்கம் கருதுகின்றது. இதனை அவர்கள் Separate unit என்று கூறுகின்றார்கள். ஆகவே தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டங்கள் இக்கட்சிகள் ஒன்றிணைவதன் ஊடாக வழங்க வேண்டிய சூழல் இருப்பதனால் அதை ஒருபோதும் இலங்கை அரசு செயற்படுத்த இடமளிக்கப்போவதில்லை. கூட்டமைப்பை பதிவு செய்வதனால் ஆபத்து ஆபத்து என கூறிக்கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தமக்காக இருக்கின்ற ஆசனத்தையும் தற்பொழுது இழக்கப்போகும் சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கின்றது. அல்லது போனால் தமிழரசுக் கட்சியை வலுப்பெற செய்வதற்கான நடவடிக்கைகளை தமிழரசுக் கட்சி எடுக்கின்றதா? என்றால் அதுவும் மந்த நிலையிலேயே செல்கின்றது. தமிழரசுக் கட்சியில் உள்ள பலர் அதை விட்டு வெளியேறும் சூழல் உருவாகின்றது. இதில் சம்பந்தன் சுமந்திரனுடைய கருத்துக்களை வைத்து தமிழரசுக் கட்சியினுடைய செயற்பாடுகள் நகர்த்தப்படுவதாகவே மக்கள் கூறுகின்றனர். தமிழரசுக் கட்சியின் தலைவராக இருக்கின்ற மாவை சோனாதிராஜா அவர்கள் ஒரு கைப்பொம்மையாக செயற்படுகின்றார் என்பது ஒரு குற்றச்சாட்டு. மாவை சேனாதிராஜாவிடம் இருக்கின்ற ஆளுமை என்பது அளப்பரியது ஆனால் அதை செயற்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை கைதியாக அவர் இருக்கின்றார். திரு. சுமந்திரன் அவர்கள் பல தவறுகளை விட்ட பொழுதிலும் அதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ளாதிருப்பது என்பது அவர் தொடர்பில் எழுந்துள்ள விமர்சனங்கள் என்பது உரிய பதிலளிக்காமை என்பதும் இவர் பயத்தினால் அதை செய்யமுடியவில்லை என்ற ஒரு நிலைப்பாடா என சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

எதுஎவ்வாறாயினும் ஒரு கட்சியின் தலைவர் இருக்கும் பொழுது அவருக்கு மதிப்பளித்து உறுப்பினர்கள் செயற்பட வேண்டுமே தவிர அவரை வைத்துக்கொண்டு எழுந்தமானத்தில் பதில்களை கூறுவது என்பது மாவை சேனாதிராஜாவிடம் இருந்து கட்சி பறிபோகப்போகின்றது என்ற சந்தேகத்தையும் வலுவடைய செய்திருக்கின்றது. த.தே கூட்டமைப்பை சுக்குநூறாக்குவதற்கு வடக்கில் கே.சுமந்திரனையும், கிழக்கில் சாணக்கியனையும் களமிறக்கியிருப்பதாக கட்சியின் அங்கத்தவர்களும் செயற்பாட்டாளர்களும் அரசியல் அறிஞர்களும் கூறுகின்றார்கள். இது ஒருபுறம் உண்மையும் கூட. எந்தவொரு காய் நகர்வுகளை நகர்த்தினாலும் இவர்களுடைய தலையீடுகள் வடக்கிலும், கிழக்கிலும் கூடுதலாக காணப்படுகின்றது. ஏனைய த.தே கூட்டமைப்பின் எம்பிக்கள் வாய்திறக்க முடியாத ஒரு சூழல் உருவாகியுள்ளது. இத்தகையதொரு சூழ்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்வதற்காக பலர் பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நிலைமை எவ்வாறு மாற்றப்பட்டாலும் கூட தமிழரசுக் கட்சியை பதிவு செய்யும் நிலைப்பாட்டில் அவர்கள் இல்லை என்பதே இன்றைய அரசியல் சூழலில் யதார்த்தம்.

ஆனால் தற்காலிகமான தேர்தல் கூட்டையும் அதற்கானதொரு அரசியல் கட்டமைப்பையும் தமிழரசுக் கட்சி உருவாக்கிக்கொள்ளுமே தவிர தாம் சுயமாக செயற்படுகின்ற செயற்பாட்டை ஒருபோதும் விட்டுக்கொடுக்க தமிழரசுக் கட்சி தயாராக இல்லை என்பதே காலகாலங்களின் அரசியல் வெளிப்பாடு. அதுபோன்றே தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமைகள் என்ற கோட்பாடுகளுடன் தொடர்ந்து பயணிப்பவர்களை தம்மோடு இணைத்துக்கொள்ளுகின்ற ஒரு செயற்பாட்டை அவர்கள் மறுபுறத்தில் மேற்கொண்டுவருகின்றார்கள். ஆனால் அரசாங்கம் கொடுக்கின்ற சலுகைகளை அவர்கள் அனுபவித்து வருகின்றார்கள். த.தே.கூட்டமைப்பின் மூன்று ஆசனங்கள் யாழ் குடா நாட்டில் இழக்கப்பட்டிருக்கின்றன. வரலாற்றில் ஒரு வேடிக்கையான நிகழ்வாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர் வெற்றிபெற்றிருக்கின்றார். ஆகவே தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகள் உரிய முறையில் செயற்படுத்தவில்லை என்பதே இதிலிருந்து புலப்படுகின்றது. தேர்தல் என்று வந்தால் ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்துவதும் வெட்டி ஓடுவதும் சகஜமானதொன்று. எதுஎவ்வாறாயினும் தமிழரசுக் கட்சி தாம் விட்ட பிழைகளில் இருந்து மீள் எழும்ப வேண்டும். அவ்வாறு மீள் எழுச்சி பெற்றால் மாத்திரமே த.தே.கூட்டமைப்பு பதிவு செய்யப்படும் என்ற ஒரு நிலைமை உருவாகும். த.தே.கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டால் தமிழரசுக்கட்சி என்னவாகும் என்ற ஒரு சுயநல சிந்தனை இருப்பதால் தான் இன்று வரை த.தே.கூ பதிவு செய்யப்படாமலே இருக்கின்றது என்பதே யதார்த்தபூர்வமான உண்மை.



**நெற்றிபொறியன்**

# டயஸ் போறாக்களை இலக்கு வைக்கும் கோட்டபாய – நிலாந்தன்

இது டயஸ்போறாக்களின் காலம். அதாவது புலம்பெயர்ந்த சமூகங்களின் காலம். அல்லது நாடு கடந்து ஒரு தேசமாக அல்லது தேசத்துக்கு வெளியே ஓர் உளவியல் தேசமாக வாழும் மக்களின் காலம். புலப்பெயர்ச்சி என்பது பொதுவாக இரண்டு காரணங்களால் ஏற்படுகிறது. முதலாவது போர். இரண்டாவது பொருளாதார காரணங்கள். ஈழத்தமிழர்களின் புலப்பெயற்சிபிரதானமாகஇரண்டுஅலைகளை கொண்டது. முதலாவது 1983க்கு முந்தியது. பெருமளவிற்கு கல்வி மற்றும் பொருளாதார காரணங்களுக்கானது. இரண்டாவது 83 ஜுலைக்கு பின்னரானது. அது முழுக்க முழுக்க போரின் விளைவு. எனினும் அதற்குள் போரை ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு பொருளாதார காரணங்களுக்காக புலம் பெயர்ந்தவர்களும் உண்டு.

உலகில் இன்று மிகக் கவர்ச்சியான டயஸ்போறாக்களில்ஒன்றாகதமிழ்டயஸ்போறா பார்க்கப்படுகிறது. மனிதகுலத்தின் மீது அதிக தாக்கத்தைசெலுத்தியதுயூதடயஸ்போறாதான். வரலாற்றில் மிக நீண்ட காலத்துக்குரியதும் யூத டயஸ்போறா தான். டயஸ்போறா என்ற வார்த்தை யூதர்களுக்குத்தான் அதிகம் பயன்படுத்தப்பட்டது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான ஒரு புலப் பெயர்ச்சி அது. அதன் விளைவாக யூதர்கள் அதிகமதிகம் ஐரோப்பிய மயப்பட்டார்கள். யூத டயஸ்போறா என்பது கிறிஸ்துவுக்கு முன்னரே தொடங்கியது இரண்டாம் உலக மகா யுத்தம் வரையிலும் நீடித்திருந்தது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அதாவது இரண்டு மில்லீனியங்களுக்கும் மேலாக யூதர்கள் புலம்பெயர்ந்தார்கள்.ஆசியாவில் தோன்றிய யூதர்கள் கடந்த இரண்டாயிரம் ஆண்டு காலப்பகுதிக்குள் அதிகம் ஐரோப்பிய மயப்பட்டார்கள். இவ்வாறு யூதர்கள் ஐரோப்பிய மயபட்டதன் விளைவுகள் தான் அணுக்குண்டு மார்க்சிசம் சிக்மன் பிராய்டின் உளவியல் கோட்பாடு முதற்கொண்டு உலகின் ஒரு தொகுதி அறிவியல் சாதனைகள் ஆகும். இந்த அர்த்தத்தில் தான் கடந்த நூற்றாண்டை யூதர்களின் நூற்றாண்டு என்று வரலாற்றாசிரியர்கள் வர்ணிப்பதுண்டு.

ஒரு டயஸ்போறா தனது தாய் நிலத்தில் ஒரு தேசத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதனை யூதர்கள் கடந்த நூற்றாண்டில் நிரூபித்தார்கள். யூத டயஸ்போறாவிலிருந்து தொடங்கி மனிதகுல வரலாற்றில் டயஸ்போறாக்களின் காலம் என்பது துலக்கமான விதங்களில் மேலெழுந்துவிட்டது. ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளை பொறுத்த வரையிலும் பல நாடுகளில் டயஸ்போறா சமூகங்கள் தத்தமது தாயகங்களில் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் செல்வாக்கு செலுத்தும்ஒருபோக்குவளர்ச்சியுற்றுவருவதை காணலாம்.ஈழத்தமிழர்களின் மத்தியிலும் தாயகத்தில் அரசியல்.சமூக.கலை பண்பாட்டுச் செயற்பாடுகளின் மீது டயஸ்போறாவின் தாக்கம் நிர்ணயகரமானதாகக் காணப்படுகிறது.

குறிப்பாக 2009க்கு பின் தமிழ் அரசியலின் மையம் தமிழ் டயஸ்போறாவா? என்று மயங்கும் அளவுக்கு நிலைமைகள் வளர்ந்துவிட்டன. போரில் தோற்கடிக்கப்பட்ட பின் தாயகத்தில் வாழும் தமிழர்களுக்கு உளவியல் ரீதியாகவும் நிதி ரீதியாகவும் தெம்பூட்டியது தமிழ் டயஸ்பொறதான். 2009க்கு பின் தோல்வியை ஒப்புக் கொள்ளாத தமிழ் கூட்டு உளவியலின் கூர்முனையாக தமிழ் டயஸ்போறா தன்னைத் தொடர்ச்சியாக முன்னிறுத்தி வருகிறது. மிகச் சில தசாப்தங்களுக்குள் நிகழ்ந்த ஒரு வளர்ச்சி இது.

இந்த வளர்ச்சியை விளங்கிக் கொள்வதற்கு இங்கே ஒரு உதாரணத்தைக் கூறலாம். 83 ஜுலைக்கு முன்பு பிரித்தானிய விமான நிலையம் ஒன்றில் நடந்த சம்பவம் அது. பிரித்தானியாவிலிருந்து நாடுகடத்தப்படுவதற்காக ஒரு தொகுதி ஈழத்தமிழர்கள் விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்கள். தாங்கள் நாடு கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக அவர்கள் திடீரெண்டு விமானநிலையத்தில் தங்களுடைய ஆடைகளை அகற்றி அரை நிர்வாணமாக நின்று தமது எதிர்ப்பை காட்டினார்கள். அதன் விளைவாக அவர்களை நாடு கடத்தும் முயற்சி நிறுத்தப்பட்டது. ஆனால் அப்படி ஒரு காட்சியை இனி எந்த ஒரு அமெரிக்க அல்லது ஐரோப்பிய விமான நிலையத்திலும் கற்பனை செய்ய முடியாது. ஏனென்றால் அன்று பிரித்தானியாவின் விமான நிலையத்தில் நிர்வாணமாக நின்றவர்களுக்கு தங்களை மற்றவர்கள் பார்ப்பார்கள் என்ற கூச்சம் இருக்கவில்லை. அதாவது அங்கே அவர்களுக்கு ஒரு சமூக இருப்போ கலாச்சார இருப்போ இருக்கவில்லை. ஒரு சமூக அல்லது கலாச்சார இருப்பு அல்லது அந்தஸ்து இருந்தால் தான் வெட்கம் வரும். மற்றவர்கள் தங்களை பார்ப்பார்கள் மற்றவர்கள் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற வெட்கம் ஏற்படும். ஆனால் அன்றைக்கு நிர்வாணமாக நின்ற தமிழர்கள் உதிரிகளாக நின்றார்கள். ஒரு சமூகமாக நிற்கவில்லை.



ஆனால் இன்றைக்கு ஈழத் தமிழர்களின் நிலை அப்படியல்ல. அப்படி எந்த ஒரு விமான நிலையத்திலும் நிர்வாணமாக நிற்க முடியாது. ஏனென்றால் ஒரு புலம் பெயர் தமிழர் அவ்வாறு நின்றால் அதை அவருடைய அடுத்த தலைமுறை அனுமதிக்காது.அல்லது அந்தப் பிள்ளையின் பிள்ளை அனுமதிக்காது. அந்தப்பிள்ளைகளுக்கு அங்கே ஒரு சமூக அடையாளமும் அந்தஸ்தும் உண்டு. அவர்கள் அந்த சமூகத்துக்குரியவர்கள். உன்னுடைய பெற்றோர் அல்லது உறவினர்கள் இப்படி நிர்வாணமாக நிற்கிறார்கள் என்று நாளைக்கு அவர்களுடைய பள்ளிக்கூடத்திலோ அல்லது வேலைத்தளங்களிலோ அந்தப் பிள்ளைகளின் நண்பர்கள் சொல்லிக்காட்டுவார்கள். மேலும். பெரும்பாலான விமான நிலையங்களில் ஈழத்தமிழர்கள் ஏதோ ஒரு வேலை பார்க்கிறார்கள். தவிர அந்த விமான நிலையங்களில் வந்து போகும் பயணிகளில் யாரோ ஒரு அல்லது பல முதல் தலைமுறை அல்லது இரண்டாம் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவர் இருப்பார்.

அதாவது ஈழத்தமிழர்கள் இப்பொழுது நாட்டுக்கு வெளியே ஒரு சமூகமாக.தேசமாக பரந்து வாழ்கிறார்கள். புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தேர்தலில் நிற்கிறார்கள். நாடாளுமன்றஉறுப்பினர்களாகவருகிறார்கள். உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக வருகிறார்கள். உள்ளூர் பிரமுகர்களாக வந்துவிட்டார்கள். உலகப் பிரபலங்கள் ஆகவும் வந்துவிட்டார்கள். இதற்கு ஆகப் பிந்திய ஓர் உதாரணத்தை இங்கு காட்டலாம். தமிழ்நாட்டின் திரைத்துறை தலைநகரமாகிய கோடம்பாக்கத்தில் அண்மையில் நடந்த ஒரு சம்பவம். நகைச்சுவை நடிகர் வடிவேலு இயக்குனர் ஒருவரோடு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நடிப்பதில் இருந்து விலகி இருந்தார். அந்தப் பிணக்கை தீர்த்து வைத்தது ஒரு புலம்பெயர் பெரு வணிகர்தான் தமிழ் திரை உலகின் மீது புலம்பெயர் சமூகத்தின் செல்வாக்கை இது காட்டுகிறதா?

1990 க்குப் பின் தமிழ் டயஸ்போறாவானது ஈழ விடுதலைப் போரின் காசு காய்க்கும் மரமாக மாறியது.குறிப்பாக தமிழ்நாட்டுக்கும் ஆயுதப் போராட்டத்துக்கு இடையே சட்டப் பூட்டு ஏற்பட்டபொழுது ஆயுதப்போராட்டம் ஐரோப்பாவை நோக்கி நிச்சயமற்ற கடல் வழிகளின் ஊடாகத் திறக்கப்பட்டது. அதிலிருந்து அதிகரித்த அளவில் ஈழப்போராட்டம் மேற்குமயப்பட்டது. ஈழப்போராட்டத்தின் காசுகாய்க்கும் மரமாக தமிழ் டயஸ்போறா காணப்பட்டது.இன்றும் தாயகத்திலுள்ள கட்சிகள் செயற்பாட்டாளர்களின் மீது ஏதோ ஒரு விதத்தில் தமிழ்டயஸ்போறா தாக்கம் செலுத்துகிறது.

குறிப்பாக 2009க்குப்பின் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்து நீதிக்கான போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவது தமிழ் டயஸ்போறா தான். 2009க்கு பின் தாயகத்தில் காணப்பட்ட அச்சச்சூழல் காரணமாக தமிழ் டயஸ்போறாவிடமே போராட்டத்தின் அஞ்சலோட்டக் கோல் ஒப்படைக்கப்பட்டதாக ஒரு தோற்றம் நிலவியது. குறிப்பாக ஜெனிவா மைய அரசியலில் மிகவும் வினைத்திறனோடு செயற்படுவது டயஸ்போறா தான்.

இவ்வாறான ஒரு முக்கியத்துவத்தைக் கருதித்தான் கடந்த வாரம் இலங்கைத் தீவின் ஜனாதிபதி அமெரிக்காவில் வைத்து தமிழ்ச் டயஸ்போறாவை நோக்கி அழைப்பு விடும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது. அன்மையில் ஐ.நா கூட்டத்தொடரில் உரையாற்றுவதற்காக சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அங்கே பொதுச்செயலர் செயலரை சந்தித்தபின் வெளியிட்ட கருத்துக்கள் அதைத்தான் நமக்கு உணர்த்துகின்றன. ஜனாதிபதி அமெரிக்காவில் நின்ற நாட்களுக்கு சற்று முன்பின்னாக நோர்வேயில் ஒரு தமிழ்ப்பெண்ணான ஹம்சாயினி நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருப்பதையும்.கனடாவில் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஹறி ஆனந்தசங்கரி மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

தமிழ் டயஸ்போறா ஒரு தவிர்க்க முடியாத சக்தியாகவும் அழுத்தப் பிரயோக சக்தியாகவும் காசுகாய்க்கும் மரமாகவும் தாயகத்தில் கட்சி அரசியல் மற்றும் செயல்வாத நடவடிக்கைகளில் நிர்ணயகரமான செல்வாக்கைச் செலுத்தும் ஒரு சூழலில் உலகப் பேரரசு ஒன்றின் தலைநகரிலிருந்து ஜனாதிபதி அந்த அழைப்பை விடுத்திருக்கிறார். டயஸ்போறாவை கையாண்டால் நிலைமையை குறிப்பிடத்தக்க அளவுக்கு சமாளிக்கலாம் என்று ஒரு முடிவுக்கு அரசாங்கம் வந்துவிட்டதாகத் தெரிகிறது.

ஆனால் இந்த அரசாங்கம் தான் சில மாதங்களுக்கு முன்பு டயஸ்போறா அமைப்புக்களையும் நபர்களையும் தடைசெய்தது.அவ்வாறு தடை செய்யப்பட்ட நபர்களும் அமைப்புகளும் ஏற்கனவே முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் தடை நீக்கப்பட்டவர்களே.அவர்களை தடையை நீக்கிய ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் மேற்கத்தைய நாடுகளுடன் இணைந்து தமிழ் டயாஸ்பொறவை வசப்படுத்த முயற்சித்தது. அதன் மூலம் தமிழ் டயாஸ்பொறவில் பிரிவினைகளையும் ஏற்படுத்தியது.

ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களால் பிரித்தாளும் தந்திரம் மிக்க ஒருவராக பார்க்கப்படுகிறார்.அவர் தமிழ்டயஸ்போறாவை குறிப்பிடத்தக்க அளவுக்குப் பிரித்தாண்டார். அதன் மூலம் ஜெனிவாக் கூட்டத்தொடர்களில் புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் இரண்டுபட்டு நின்றது. இது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐ.நாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் தமிழ் மக்களை கையாள்வதற்கான வழிகளை ஒப்பீட்டளவில் இலகுவாக்கி கொடுத்தது.

ஆனால் ராஜபக்சக்கள் மறுபடியும் ஆட்சிக்கு வந்தபின் அந்த அமைப்புகளையும் தனி நபர்களையும் மறுபடியும் தடை செய்தார்கள். எனினும் அவ்வாறு தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பின் தலைவரான கத்தோலிக்க மதகுரு இப்பொழுதும் யாழ்ப்பாணத்தின் தெருக்களில் லேடிஸ் சைக்கிளில் வழமைபோல நடமாடித் திரிகிறார். கோட்டாபயராஜபக்சவின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த புதிதில் தன்னை மூன்றில் இரண்டு தனிச் சிங்கள வாக்குகளால் வெற்றி பெற்ற ஓர் அரசாங்கமகவே காட்டிக்கொண்டது. ஆனால் ராஜபக்சக்களின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின் தொடக்கத்திலிருந்தே வைரஸ் அரங்கினுள் பிரவேசித்தது. இதனால் ஏற்கனவே சரிந்து போயிருந்த பொருளாதாரம் மேலும் திணறியது. தவிர மேற்கு நாடுகள் மற்றும் ஐ.நா வின் அழுத்தமும் அதிகரித்தது.


இவற்றின் விளைவாக ராஜபக்சக்கள் மேற்கையும் ஐ.நாவையும் நோக்கிய தமது அணுகுமுறைகளை தளர்த்த தொடங்கினார்கள். பசில் ராஜபக்சவை முன்னிறுத்தி ராஜிய மாற்றங்களை அவர்கள் முன்னெடுத்தார்கள். பசில் ராஜபக்ச, புதிய வெளியுறவு அமைச்சர் ஜி எல் பீரிஸ் .இந்தியாவுக்கான தூதர் மிலிந்த மொரகொட போன்றோரை முன்னிறுத்தி அரசாங்கம் மேற்கையும் இந்தியாவையும் ஐநாவையும் சுதாகரிக்கும் வேலைகளை தொடங்கியது.அந்த வேலைகளின் ஒரு பகுதியாகவே ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அதே உபாயத்தை அதாவது தமிழ் டயஸ்போறாவை அரவணைத்துப்பிரிக்கும் உத்தியை அரசாங்கம் கையிலெடுத்திருக்கிறதா?

அமெரிக்காவில் ஜனாதிபதி ஆற்றிய உரை அதைத்தான் நமக்கு உணர்த்துகிறது.அவர் உள்ளகப் பொறிமுறைக்கு புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்திடம் ஆதரவை கேட்கிறார். அதோடு தமிழ் டயஸ்போறாவை நாட்டில் வந்து முதலீடு செய்யுமாறு கேட்கிறார்.இது ஒரு உத்தி மாற்றம்.அரசாங்கம் தமிழ் டயஸ்போறாவின் இன்றியமையாத் தன்மையை விளங்கியிருப்பதை இது உணர்த்துகிறது.

இது விடயத்தில் டயஸபோறாவும் உட்பட முழுத்தமிழ் சமூகமும் மாறிவரும் புதிய சூழலை தொகுத்தும் பகுத்தும் கற்றுக்கொள்ளவேண்டும்.

IIஆம் பக்கம் பார்க்க...

# வடகடலில் சீன வேடதாரிகள்



இலங்கைக்கான சீன தூதுவரின் இராஜதந்திர விஜயமானது இந்தியாவை சீண்டிப்பார்க்கும் ஒரு விடயமாகவே பார்க்கப்படுகின்றது. அந்த அடிப்படையில் 30 ஆண்டு காலங்களாக இலங்கையின் வடபகுதியில் கால் பதிக்காத சீனா இந்தியாவை அண்மித்த கடற்கரையோர பகுதிகளை தனது வசப்படுத்துவதற்காக ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அரண்களை அமைப்பதற்கு யாழ் குடா நாட்டில் கரையோர பகுதிகள், முக்கிய தளங்களை பார்வையிட்டது மட்டுமன்றி நவீன ரோன் கமெராக்கள் மூலம் படங்களையும் பிடித்து சென்றுள்ளனர். என்றுமில்லாதவாறு யாழ் குடா நாட்டில் பாதுகாப்பை பலப்படுத்தியது மட்டுமன்றி பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் சீன தூதுவர் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். இந்தியாவை பொறுத்தவரையில் இலங்கை பட்டிருக்கின்ற அனைத்து கடன்களையும் தாமே கட்டுவதாக கூறியுள்ளார்கள். அவ்வாறாக இருந்தால் சீனாவை எதிர்க்கின்ற ஒரு சூழல் உருவாக்கப்படும். அதற்கு முன்பதாகவே சீன தூதுவர் இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் மற்றும் யாழ் மாநகர சபை முதல்வர் இருவரையும் சந்தித்து கலந்துரையாடி சென்றுள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் யாழ்ப்பாண பொதுசன நூலகத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டுள்ளார். சீன தூதுவர் உள்ளிட்ட குழுவினரை யாழ்ப்பாணம் மாநகர முதல்வர், சட்டத்தரணி வி.மணிவண்ணன் மற்றும் மாநகர ஆணையாளர் இ.ஜெயசீலன் உள்ளிட்டவர்கள் வரவேற்றார். பின்னர் சீன தூதுவர் நூலகத்திற்கு ஐந்து மடி கணினிகளையும் சில புத்தகங்களையும் வழங்கி வைத்ததோடு நூலகத்தையும் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சீனக்குழுவினர் பருத்தித்துறை முனைப் பகுதியைப் பார்வையிட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனத்தூதரக அதிகாரிகள் யாழிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் யாழ்ப்பாணம் வந்த சீனா தூதுவர் வேட்டி கட்டி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

அதேநேரம் வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கீ சென் ஹொங் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மைச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்த நிலையில் குறித்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இலங்கை - சீன கூட்டு முயற்சியான குயிலான் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வருகின்ற கடலட்டை குஞ்சு இனப் பெருக்கப் பண்ணையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது. இந்நிலையில் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் மக்களுக்கு வளமான எதிர்காலத்தினை பெற்றுத் தரக்கூடிய முதலீடுகளையும் தொழில் நுட்பங்களையும் வரவேற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் சீன முதலீட்டு முயற்சிகளை வரவேற்பதாக தெரிவித்தார். கடலட்டை பண்ணை முதலீட்டின் ஊடாக ஐந்து மடங்கு இலாபத்தினை பெற்றுக் கொள்ள முடியும் என்பது ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த முதலீட்டின் மூலம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். அதேவேளை யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சீனாவினால் சுமார் 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஊடாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு சுமார் 13.75 மில்லியன் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகளையும் 6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வலைகளையும் வழங்கி வைத்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவரின் அழைப்பினை ஏற்று, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு உதவித் திட்டங்களை பயனாளர்களுக்கு வழங்கி வைத்தார். கொரோனா பரவல் உட்பட பல்வேறு காரணங்களினால் வாழ்வாதார அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் தேவைப்படுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு தரப்புக்களிடமும் கோரிக்கை முன்வைத்த நிலையில், சீனாவினால் முதல் கட்டமாக குறித்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறிருப்பினும் சீனாவினுடைய காலணித்துவத்தை வடபகுதியிலும் நிலைநிறுத்துவதற்கே இவ்வாறான முதற்கட்ட நகர்வினை மேற்கொண்டுள்ளது. இவ்வாறு தொடருமானால் இந்தியா தனது புலனாய்வு நடவடிக்கைகளை யாழ் குடா நாட்டுக்குள் முடக்கி தமது நாட்டின் பாதுகாப்பை சீனாவிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதே இன்றைய அரசியலின் யதார்த்தம்.

2016-2017 காலப்பகுதியில் மட்டும் ஆபிரிக்கா நாடுகளில் ஒன்றான கென்யாவிற்கு 9.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை சீனா கடனாக வழங்கி இருந்தது. ரயில் பாதை மற்றும் வீதி அபிவிருத்தி திட்டங்களுக்கு மேற்குறித்த நிதி செலவிடப்பட்டது .

இந்த கடன்களின் பின்னணியில் தற்போது கென்யாவின் இலாபகரமான துறைமுகங்களின் ஒன்றான Port of Mombasa ஐ அபகரிக்க சீனா நிர்பந்தித்து வருகின்றது. குறிப்பாக சீனாவிடம் இருந்து Standard Gauge Railway திட்டங்களுக்காக பெற்று கொண்ட கடன்களை கென்யா மீள செலுத்த தவறினால் Port of Mombasa துறைமுகத்தை சீனாவிடம் கென்யா இழக்கும் அபாயம் ஏற்பட்டு இருக்கின்றது.அதே போல சாம்பியா நாட்டின் மொத்த கடனில் மூன்றில் ஒரு பங்கு சீனாவிடம் இருந்து பெறப்பட்டு இருக்கின்றது. இதன் மூலம் இந்த நாட்டின் இறையாண்மையை மீறி சாம்பியா அரசுக்கு சொந்தமான Zesco மின் உற்பத்தி நிறுவனத்தை கையகப்படுத்த சீனா முயற்சி செய்து வருகின்றது .

Djibouti எனும் மற்றுமொரு ஆபிரிக்கா நாடு 77 % ஆன தனது கடன்களை சீனாவிடம் இருந்து பெற்று இருக்கின்றது. இதன் மூலம் நாட்டிற்குள் நுழைந்த சீனா தற்போது தனது முதலாவது சர்வதேச இராணுவ தளத்தை இந்த நாட்டில் நிறுவி இருக்கின்றது

தென் அமெரிக்கா நாடுகளில் ஒன்றான ஈக்வடார் தனது கச்சா எண்ணெய் உற்பத்தியில் 80 முதல் 90 சதவிகிதத்தை தான் சீனாவிடம் இருந்து பெற்றுக்கொண்ட 26.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு பதிலாக சீனாவிற்கு வழங்க நிர்பந்ததின் பேரில் ஒப்பு கொண்டு இருக்கின்றது .

தஜிகிஸ்தான் நாட்டில் அமைக்கப்பட்ட மின்நிலையத்திற்காக சீனா அரசாங்கத்திடம் இருந்து பெற்று கொள்ளப்பட்ட நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்கள் நிலுவையில் உள்ள கடனை தள்ளுபடி செய்வதற்கு சுமார் 1,000 சதுர கிலோ மீற்றர் (390 சதுர மைல்) நிலபரப்பை தஜிகிஸ்தான் நாட்டில் குத்தகை அடிப்படையில் சீனா அபகரித்து இருக்கின்றது Montenegro நாட்டில் அமைக்கப்பட்ட A-1 motorway வீதி அபிவிருத்தி திட்டத்திற்காக சீனா அரசாங்கம் வழங்கிய 1 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடன்களை திருப்பிச் செலுத்த தங்களுக்கு உதவுமாறு ஐரோப்பியா ஒன்றியத்திடம் அந்த நாட்டு அரசாங்கம் கோரிக்கை முன் வைத்து இருக்கிறது. கடன்களை மீள செலுத்த தவறும் பட்சத்தில் சீனா நாட்டிடம் தங்களின் ஆயிரக்கணக்கான ஹெக்டேர் நிலங்களை இழக்க வேண்டிய அபாயத்தில் இருப்பதாக Montenegro அரசாங்கம் சில வாரங்களுக்கு முன்னர் சொல்லி இருக்கின்றது மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீத் அவர்கள் , தனது நாடு சீனாவிடம் இருந்து 3.5 பில்லியன் டொலர் பெறுமதியான கடன்களை பெற்று இருப்பதாக சொல்லி இருப்பதுடன் மேற்குறித்த கடன்கள் தனது நாட்டின் இறையாண்மையை கேள்விக்கு உட்படுத்தி இருப்பதாகவும் தங்களது நாட்டின் சுதந்திரம் , மனித உரிமைகள் உட்பட்ட பல பிரச்சனைகளுக்கு வழி வகுத்து இருப்பதாகவும் ஏற்று கொண்டு இருக்கின்றார்.

அதே போல இலங்கையின் அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றை அமைப்பதற்கான நிதியில் 85 % வீத கடன்களை சீனா வழங்கியதன் மூலம் மேற்படி துறைமுகத்தை சீனா அரசுக்கு சொந்தமான Port Holdings Company Limited நிறுவனம் மூலம் 99 வருட குத்தகைக்கு பெற்று கொண்டு இருக்கிறார்கள். இது தவிர தற்போது பாராளமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட $1.4 பில்லியன் பெறுமதியான Colombo Port City கட்டுமானத்தின் போது China Communications Construction Company (CCCC) என்கிற சீனா அரசுக்கு சொந்தமான மோசடி நிறுவனத்தை ராஜபக்சே குடும்பத்தின் ஒத்துழைப்புடன் பிரதான முதலீட்டாளராக உள் நுழைத்து இருந்தார்கள் பங்களாதேஷ் , பிலிப்பைன்ஸ் போன்ற பல நாடுகளில் மோசடிகளில் ஈடுபட்ட மேற்படி நிறுவனமும் தன் துணை நிறுவனங்களும் தற்போது அமெரிக்கா உட்பட்ட பல நாடுகளில் தடை செய்யப்பட்டு இருக்கின்றது இது தவிர நிறைவேற்றப்பட்ட துறைமுக சட்டமூலத்தின் மூலம் Inland Revenue,VAT, Excise, Customs, Betting & Gaming Levy, Exchange Control, Casino Business Regulation போன்ற சகல நெறிமுறைகளில் இருந்தும் விலக்கு பெற கூடிய நிலப்பரப்பை தங்களுக்கு உரியதாக இலங்கை தீவில் உருவாக்கி கொண்டு இருக்கின்றார்கள்

அதே போல இலங்கை மாகாண சபைகளுக்கும் மாநகர சபைகளுக்கும் கட்டுப்பட அவசியமற்ற நிர்வாகத்தை இலங்கை தீவில் உருவாக்கி இருக்கின்றார்கள்

குறித்த இலங்கையின் துறைமுக நகரத்திற்குள் தங்களது விருப்பு வெறுப்புக்குரிய முதலீட்டர்களை மட்டுமே அங்கீகரிக்கும் முறை ஒன்றையும் ஏற்படுத்தி இருக்கின்றார்கள் அதே போல இலங்கையர்கள் யாரும் இலங்கை பணமான ரூபா மூலம் துறைமுக நகரத்தில் முதலீடு செய்ய முடியாது என்கிற சூழலையும் ஏற்படுத்தி இருக்கின்றார்கள்

இது தவிர , குறித்த பகுதியில் சில்லறை வியாபாரத்தில் ஈடுபடும் இலங்கையர்கள் நகரை விட்டு வெளியேறும் போது கட்டணம் செலுத்த வேண்டிய நிர்பந்தமும் ஏற்படுத்த பட்டு இருக்கின்றது இதுமட்டுமில்லாது நுரைசோலை, யாழ்ப்பாண தீவுகள் என பரந்துபட்டு தங்களது வணிக விரிவாக்கங்களில் ஈடுபட சீனா முயற்சித்து வருகின்றது

மறுபுறம் வீதி அபிவிருத்தி திட்டங்கள் , நீர்ப்பாசன திட்டங்கள் என எண்ணற்ற உட்கட்டமைப்பு வசதிகளுக்காக இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக சீனாவிடம் இருந்து கடன்களை பெற்று இருந்தது .

சீனா உட்பட வெளிநாடுகளில் இருந்து பெற்று கொள்ளப்பட்ட கடன்களை மீள செலுத்தும் ஆற்றலை தற்போது இலங்கை இழந்து விட்ட நிலையில் யாழ்ப்பாணம் , கொழும்பு உட்பட பல பகுதிகளில் நிலங்களை குத்தகைக்கு வழங்கும் நிலைக்கு இலங்கை வந்து இருக்கின்றது குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை , பளை , தீவகம் போன்ற இடங்களிலில் உள்ள அரச நிலங்கள் குத்தகைக்கு வெளிநாடுகளுக்கு வழங்கப்பட இருக்கின்றன. மேற்குறித்த நிலங்களை பெற்றுக்கொள்ளுவதில் சீனா நிறுவனங்கள் முன்னணியில் இருக்கின்றன. என்பது குறிப்பிடதக்கது.

தமிழ் வெறியன்



# 2004 டிசம்பர் 26, உலகை உலுக்கிய ஞாயிற்றுக்கிழமை : சுனாமியின் 17ஆம் ஆண்டு நினைவு தினம்!

கடலோர மக்களுக்கு அலைகளும், அலையின் இசையும் புதிதல்ல. கடலும், காதலும், வாசமும் விசுவாசமாக பழகிப்போன இசையும் இசைந்துபோன வாழ்வும் அது. சந்தேகமில்லா உறவு கடலுக்கும் அந்த கரையோர மக்களுக்கும் அந்த டிசம்பர் 26 வரை இருந்தே வந்தது. அன்று வந்த சுனாமி அலையையும் அதனாலயே சாதாரணமாகவே நினைத்தனர். ஆனால், ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைப் பறித்து பல ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்வை தலைகீழாக புரட்டிப்போடும் என்று யாரும் கனவிலும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

2004 ஆம் ஆண்டு கிறிஸ்மஸின் மறுதினத்தை உலகம் அவ்வளவு எளிதில் மறக்க மாட்டாது. அந்த ஞாயிற்றுக் கிழமை எழும்பிய ஆழிப்பேரலையின் ஓலத்தின் ஓசை 17 ஆண்டுகள் கடந்தும் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இப்போதுவரை அந்த கொடூர சீற்றத்திலிருந்து மீளமுடியாமல் உலகின் சில பகுதிகள் உழன்று கொண்டிருக்கின்றது. உலகில் ஏற்பட்ட மிகப்பெரிய இயற்கைப் பேரழிவுகளில் சுனாமியே முதன்மையானது. 2020 இல் அமேசன் காடுகளை எரித்துக்கொண்டு ஆரம்பித்து, கொரோனா அலை உலகை ஆட்டிப்படைத்து உலகின் வல்லரசுகளை ஆட்டம் காணச்செய்து, வறுமை ருத்ரதாண்டவம் ஆடி பல்வேறு அனர்த்தங்களை உலகம் கண்டிருந்தாலும் இன்றுவரை ஆரம்ப சூடு தணியாமல் சுனாமியின் தாக்கம் வருடங்கள் பதினேழு கடந்தும் தொடர்ந்து வருவது வேறுகதை.

2004-ம் ஆண்டு இந்தோனேஷியாவின் சுமத்ரா எனும் தீவில் உள்ள கடல்பகுதியில் அதிகாலை வேளையில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் 9.1 முதல் 9.3 ரிக்டர் அளவிற்குப் பதிவானது. இதன் காரணமாக ஏற்பட்ட சுனாமியால் சுமார் 14 நாடுகளுக்கு மேல் பாதிக்கப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். உலக பொருளாதாரம் பல கோடி டாலர்கள் கடலில் மிதந்து அழிந்து போனது. கோடிகளில் மிதந்த பண அரசர்கள் பலரும் நடுத்தெருவுக்கு வந்தனர்.

சுனாமியலையின் பாதிப்பின் அகோரமுகத்தை இலங்கையின் கடலோர மாவட்டங்கள் எல்லாம் மிகவும் மோசமாகச் சந்தித்தது. இன்று வரை டிசம்பர் 26-ம் திகதி மறக்க முடியாத நாளாக அனைவரின் உள்ளத்திலும் அதனாலயே இந்த நாள் அழியாமல் உள்ளது. கடலோர பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு கடல் அலைகள் புதிதல்ல. அன்று வந்த அலையையும் சாதாரணமாகவே நினைத்தனர். 2004 ஆம் ஆண்டு 25 ஆம் திகதி நத்தார் பண்டிகையை கொண்டாடிய சந்தோசத்தில் திளைத்திருந்த மக்களை, துயரத்தின் எல்லைக்கு அடுத்தே நாளே கொண்டு செல்லும் நிலையில் அந்த கோர சம்பவம் நடந்தேறியது. இந்து சமுத்திரத்தின் அருகில் உள்ள இந்தோனேசியாவின் தீவுக் கூட்டங்களில் ஒன்றான சுமாத்திரா தீவின் வடக்கே கடலுக்கு அடியில் காலை 07 மணியளவில் 9.0 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கமானது சுனாமியைத் தோற்றுவித்தது.

சுனாமி பேரலைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல், இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, அந்தமான் தீவுகள் என உலகின் 14 நாடுகளைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்து 676 உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் வீடுகள், கட்டிடங்கள், வாகனங்கள், உயிரினங்கள் என கண்ணிமைக்கும் நொடியில் அனைத்தும் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது. இதில் இந்தோனேசியாவில் ஒரு இலட்சத்து 84 ஆயிரம் உயிர்களும் இலங்கையில் 35 ஆயிரத்து 322 பேரும் பலியானதாக அன்றைய ஆரம்ப அறிக்கை கூறியது.

சுனாமியின் தாக்கத்தால் அதிகளவான அழிவுகளை எதிர்கொண்ட இரண்டாவது நாடு இலங்கை என்பது வேதனையான உண்மை. எமது நாட்டில் சுமார் 35,322 பேரின் உயிர்கள் பறிபோகின. சுமார் ஐந்தரை இலட்சம் பேர் வரை இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் லட்சக்கணக்கான கட்டிடங்கள் முற்றாக தரைமட்டமாகியது. வடக்கு-கிழக்கு மாகாண கடற்கரையோரப் பிரதேசங்களே அதிகளவான சுனாமி அழிவுகளை சந்தித்தது.

இலங்கையின் கிழக்கு கல்முனைப் பகுதியை தாக்கிய சுனாமி அலையினால் முற்றாக அழிந்துபோன அக்பர் கிராமம் முதல் பொத்துவில் வரையுள்ள நீண்ட கடற்கரைப் பகுதிகளே பெருமளவு பாதிப்பை கண்டுள்ளன. மட்டுமில்லாமல் திருக்கோவில் தம்பட்டை கிராமங்கள் முழுமையாக அழிந்துள்ளன. 2004இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையினால் இலங்கையின் பாரிய மனித உயிர்சேதம் அம்பாறை மாவட்டத்திலேயே இடம்பெற்றிருக்கின்றது. இங்கு சுமார் 9 ஆயிரத்திற்கும் அதிக மக்களை கடல் காவுகொண்டுள்ளது. இதற்கு அடுத்ததாக சுமார் 4500 பேர் ஹம்பாந்தோட்டையிலும், சுமார் 3774 பேர் காலியிலும், மட்டக்களப்பில் 2975 பேரும், முல்லைத்தீவில் 2902 பேரும் பலியானதாக ஆரம்ப அறிக்கை கூறியபோதிலும் பின்னர் இவை மாற்றம் ஏற்பட்டது. அதேசமயம் கொழும்பிலிருந்து ஹம்பாந்தோட்டை சென்ற ரயில், அதாவது மிகுந்த சனநெரிசல் மிக்க பயணிகள் ரயில் கடலலையின் சீரற்றத்திற்கு இரையானது. இதில் மிக மகிழ்வுடன் வீடு நோக்கிப் பயணித்தவர்களில் 1700 இற்கும் மேற்பட்ட மக்கள் நிரந்தரமாக உலகை விட்டு விடைபெற்று போனார்கள். இது ஆசியாவின் ரயில் விபத்துக்களில் முக்கியமானதாகவும் உள்ளது. என்பதுதான் மறக்க முடியாத சோக நிகழ்வாகும்.

இந்த சுனாமியின் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 14 நாடுகளில் ஒட்டுமொத்தமாக சுமார் 2,29,866 பேர் உயிரிழந்தனர். மேலும் 1,25,000 பேருக்கு மேல் காயமடைந்தனர். 43,786 காணாமல் போயினர். மேலும் 17 லட்சத்துக்கும் அதிகமானோர் தங்கள் வாழ்விடத்தை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர்.அதிகம் பாதிக்கப்பட்ட நாடான இந்தோனேசியாவில் மட்டும் 1,67,736 உயிரிழந்துள்ளனர். 37,063 பேர் காணாமல் போயினர்.



நேரடியாகப் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்த பல நாட்டு சுற்றுலாப்பயணிகளும் இந்தப் பாதிப்பில் சிக்கி இறந்தது மிகவும் சோகமான விஷயம். மீனவர்கள் சுனாமியில் சிக்கி உயிரிழந்ததால் அவர்களையே நம்பியிருந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்றுவரை அந்தத் துயரத்திலிருந்து மீண்டுவரமுடியாமல் தவித்து வருகின்றனர். சுனாமி பாதிப்பின் நினைவாக ஆங்காங்கே சுனாமி நினைவுப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. சுனாமி பாதிப்பு ஏற்பட்டு இன்றுடன் 17-வது ஆண்டு நிறைவடைந்துள்ள நிலையில் உயிர்களை பறிகொடுத்த பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள், மீனவர்கள், பொதுமக்கள் எனப் பலர் ஒவ்வொரு ஆண்டும் அவர்களை நினைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த பொழுதில் இலங்கை மண்ணை காவுகொண்ட சுனாமி அலை அம்பாறையை வெகுவாக பாதித்த போது இல்லிடம் கொடுத்து, உன்ன உணவும் கொடுத்து அடைக்கலம் காத்த சம்மாந்துறை மண்ணின் மனதையும், மறைந்த அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் அன்றைய நாட்களையும் பாராட்டாமல் விட முடியாது. நாட்கள் கடந்து மாதங்கள் தாண்டி வருடக்கணக்கில் அடைக்கலம் கொடுத்தது மட்டுமின்றி சுனாமியில் மரணித்த உடல்களையும் சம்மாந்துறை மண் தனது மடியில் தாங்கி கொண்டது இங்கு நன்றியுடன் நினைவு கூறப்பட வேண்டியதே.

இப்படியான கொடூர துயரத்தை தன் மடியில் சுமந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் உலகின் மூலை முடுக்குகள் எல்லாவற்றிலிருந்தும் இலங்கை தேசத்தை வந்தடைந்தது. கொடூர சுனாமியை பின்னாட்களில் சிலர் தங்கச்சுனாமி என்றழைக்கும் நிலைக்கும் சில சம்பவங்கள் நடந்தேறியதை வரலாறு பதிந்துகொள்ள தவறவில்லை. அதிகமான ஆபத்தையும், சேதங்களையும் சந்தித்த மக்களுக்கு இன,மத, பிரதேசவாதங்கள் கடந்து வெளியூர்களை சேர்ந்த சிங்கள சகோதரர்கள் வீடுகளை சுத்தப்படுத்த களமிறங்கி மிகப்பெரும் சேவையொன்றை செய்து முடித்தார்கள். மனிதர்கள், விலங்குகள், பறவைகள் உட்பட பல்வேறு உயிரினங்களின் இறப்பினால் வெளிவந்துகொண்டிருந்த தூர்நாற்றங்களையெல்லாம் கடந்து மனிதாபிமானம் அந்த நாட்களில் தழைத்தோங்கிநின்றது. விடுதலைப்புலிகளும், இலங்கை இராணுவமும், பொலிஸாரும், சிவில் அமைப்புக்களும், வெளிநாட்டு நிறுவனங்களும் பகைமை மறந்து களமாடிய நாளின் தொடக்கப் புள்ளியாக சுனாமி அன்றைய நாள் அமைந்திருந்தது வரலாற்று பொக்கிஷமான நினைவுகள்.

அகதி வாழ்க்கை, நிவாரண தொடர்கள், தரைமட்டமாகிய பொருளாதாரம், வரிசைகளில் உணவுக்காக காத்திருப்பு, வீடு கேட்டு, நிவாரணம் கேட்டு போராட்டங்கள், என புதிய அனுபவங்களை கோடிகளில் மிதந்தவர்களுக்கும் சுனாமி பாடம் கற்பித்திருந்தது. இப்படியான போராட்டங்களின் வெளிப்பாடாக உருவாக்கப்பட்ட நுரைச்சோலை வீட்டுத்திட்டம், மருதமுனை மேட்டுவட்டை வீட்டுத்திட்டம் போன்ற வீட்டுத்திட்டங்கள் பல இன்றும் மக்களிடம் கையளிக்கப்படாத அவலம் தொடர்வதையும் இந்த இடத்தில் நினைப்படுத்தாமல் விட முடியாது.

உயிர்களையும், பல கோடி மதிப்புள்ள சொத்துக்களையும் இழக்கச்செய்து பல நூற்றுக்கணக்கானவர்களையும் காணாமல் ஆக்கி அம்பாறை மாவட்ட மக்களுக்கு அகதி வாழ்வின் அத்தனை அத்தியாயங்களையும் கற்பித்தது. இந்த அகதி வாழ்விலிருந்து விடுபட பலரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அதில் முக்கிய தேவையாக இருந்த இல்லிடம் எனும் பிரச்சினையை தீர்க்க நாட்டின் பல பகுதிகளிலும் பல்வேறு வீட்டுத்திட்டங்கள் உருவானது. அதில் முக்கியமான ஒரு வீட்டுத்திட்டம் தான் நுரைச்சோலை வீட்டுத்திட்டம், மருதமுனை மேட்டுவட்டை வீட்டுத்திட்டம் போன்ற வீட்டுத்திட்டங்கள்.

சுனாமியால் வாழ்விடங்களை இழந்தவர்களுக்காக நுரைச்சோலைப் பிரதேசத்தில் சவூதி அரேபியாவினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் 2010 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது. இந்த வீட்டுத் திட்டத்தை இந்த கட்டுரை வாசிக்கும் நிமிடம் வரை உரிய பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்க முடியாமல் போனமைக்குப் பின்னால், வறட்டு கௌரவத்துடன் கூடிய ஓர் இனவாதச் சிந்தனை, அதிகாரிகளின் அசமந்த போக்கு, சிலரின் சுயநலம் என்பன இருந்தது என்பதைப் புறந்தள்ளி விட முடியாது. சம்பந்தமே இல்லாத காரணங்களை முன்வைத்து தொடுக்கப்பட்ட ஒரு வழக்கின் காரணமாக எப்போதோ பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வேண்டிய நுரைச்சோலை வீட்டுத்திட்டமானது, தற்போது சிதைந்து, பழுதடைந்து, காடுகள் வளர்ந்து மனித இனம் பயன்படுத்த முடியாத நிலையில் கொடிய விலங்குகளின் சரணாலயமாக காணப்படுகிறது என்பதுதான் கவலையான விடயம். முஸ்லிம் நாடுகளின் நன்மதிப்பை பெற்ற மஹிந்த அரசில் கட்டப்பட்ட இந்த வீட்டுத்திட்டத்தை ராஜபக்ஸக்களின் ஆட்சியில் மக்களுக்கு வழங்க வேண்டும். கடந்த காலங்களில் நடந்த தவறுகளுக்கு மன்னிப்பு தேடும் விதமாக அரசின் அச்சாணியாக இருக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸ, நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஸ போன்றோருடன் ஏனைய ஆளும்தரப்பு எம்.பிக்களும், எதிர்தரப்பு எம்.பிக்களும் ஒன்றிணைந்து இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.



**நூருல் ஹீதா உமர்**

**11ஆம் பக்கம் பார்க்க...**



# பிராந்திய செய்திகள்



## நிரந்தர தீர்வினை பெற்றுத்தர அரச உத்தியோகத்தர்கள் கோரிக்கை!

திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண அமைச்சு மற்றும் பல்வேறு திணைக்களங்களில் கடமையாற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களை திருகோணமலைக்கு ஏற்றிச் செல்வதற்காக வேண்டி இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான மட்டக்களப்பு - திருகோணமலை செல்லும் பஸ் சேவை தினமும் அதிகாலை 5.45 மணிக்கு மட்டக்களப்பிலிருந்தும், மாலை 4.30 மணிக்கு திருகோணமலையிலிருந்தும் இச்சேவை இடம்பெறுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களை உரிய நேரத்துக்கு அழைத்துச் செல்வதற்காக வேண்டி இலங்கை போக்குவரத்து மட்டக்களப்பு சபைக்குச் சொந்தமான இந்த பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து மாதத்தில் மூன்று நாட்கள் இடைநடுவில் பழுதடைந்தும், டயர் காற்றுப்போகும் நிலைமையே காணப்படுவதாகவும், இதனால் உரிய நேரத்துக்கு தங்களின் அலுவலக கடமைக்கு செல்ல முடியாது அன்றைய தினம் அரைநாள் விடுமுறையாகவும் செல்கின்றது என அதில் பயணிக்கும் அரச உத்தியோகத்தர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளையும் அவர்கள் எடுக்கவில்லை என்றும் விசனம் தெரிவிக்கின்றனர்.இதில் பயணிக்கும் அனைத்து உத்தியோகத்தர்களும் திருகோணமலையில் உள்ள கல்வியமைச்சு, சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு, பிரதிப் பிரதம செயலாளர் செயலகம், சுகாதாரத் திணைக்களம், கட்டடங்கள் திணைக்களம், பொதுச் சுகாதார சேவைகள் அலுவலகம், உள்ளூராட்சி திணைக்கம் மற்றும் உள்ளூராட்சி சபைகள், கூட்டுறவு திணைக்களம், தபால் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உள்ளிட்ட பல்வேறு அரச நிருவனங்களில் கடமையாற்றுகின்றவர்களாவர்.

இந்தப் பிரச்சினை அடிக்கடி இடம்பெறுகின்றமையினால் இடைநடுவில் வேறு பஸ்ஸில் பயணிக்கவேண்டிய ஒரு சங்கடமான சூழ்நிலைமைக்கு ஆளாகவேண்டியுள்ளதுடன் தேவையற்ற செலவீனங்களும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். எனவே, அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வினை வழங்க உரிய அதிகாரிகள் அதற்கான நடவடிக்கையினை உடனடியாக எடுத்து அரச கடமைகளுக்குச் செல்லும் அரச உத்தியோகத்தர்களின் பிரச்சினையை தீர்த்து வைக்க முன்வரவேண்டும் என்ற கோரிக்கையினை முன் வைக்கின்றனர்.





## எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் 3,000 கோழி குஞ்சுகள் தீக்கிரை!

பன்னல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்லேகம எலிபிச்சிய பிரதேசத்தில் உள்ள கோழிப்பண்ணை ஒன்றில் எரிவாயு கசிவு காரணமாக தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

அன்று (24) அதிகாலை 3.20 மணியளவில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் ஏற்பட்ட தீ விபத்தினால் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கோழி குஞ்சுகள் உயிரிழந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

நீர்கொழும்பு பகுதியில் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான 17 ஏக்கர் காணியில் கோழிப்பண்ணை அமைந்துள்ளது. குறித்த கோழிப்பண்ணையில் சுமார் 35.000 குஞ்சுகளை அடைக்கக்கூடிய ஏழு கூடங்கள் உள்ளன. அதில் ஒரு கூடத்தில் தீப்பிடித்துள்ளது.

கோழி குஞ்சுகளுக்கு தேவையான வெப்பத்தை ஏற்படுத்த 37.5 கிலோகிராம் எடையுள்ள மூன்று எரிவாயு சிலிண்டர்கள் பொருத்தப்பட்டிருந்த நிலையில், அதில் ஒரு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். எவ்வாறாயினும் நீர்கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன் சேத விபரங்கள் இதுவரை கணக்கிடப்படவில்லை. பன்னல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## முல்லைத்தீவு சிறுமியின் மரணம் குறித்த வெளியாகியுள்ள திடுக்கிடும் தகவல்கள்

முல்லைத்தீவில் 13 வயது சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பல உண்மைகள் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளன. சம்பவத்தில் உயிரிழந்த 13 வயது சிறுமியின் தாய், தந்தை, மூத்த சகோதரி மற்றும் கணவர் ஆகியோரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விசாரணையில் சிறுமி இறக்கும் போது சுமார் இரண்டு மாத கர்ப்பிணியாக இருந்தது தெரியவந்தது. இந்த சம்பவம் தொடர்பாக சிறுமியின் மூத்த சகோதரியின் கணவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார். பிரேத பரிசோதனையில் சிறுமி அதிக இரத்தப்போக்கு காரணமாக உயிரிழந்தது தெரியவந்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி முதல் சிறுமியை காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், சிறுமியைத் தேடி பிரதேசவாசிகள், பொலிஸார், மற்றும் இராணுவத்தினர் பல நாட்களாக தேடுதல் வேட்டை நடத்தினர். இந்த தேடுதல் நடவடிக்கையின் போது முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூங்கிலாறு பகுதியில் பாழடைந்த காணி ஒன்றில் இருந்து சிறுமியின் சடலம் கடந்த 18 ஆம் திகதி கண்டெடுக்கப்பட்டதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தந்தை மரணம் தொடர்பில் பல தகவல்களை வெளிப்படுத்தியுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, குடும்பத்தாரின் சம்மதத்துடன் கருவை அழிக்கும் நோக்கில் கருத்தடை மருந்து செலுத்தியதன் பின்னர் அதிக இரத்தப்போக்கு காரணமாக சிறுமி உயிரிழந்துள்ளதாக வதந்தி பரவி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, உயிரிழந்த சிறுமி தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்து செல்லும் சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பிலும் பலராலும் பேசப்பட்டு வரும் நிலையில் பெண்கள் மற்றும் குழந்தைகள் அபிவிருத்தி, பாலர் மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா உள்ளிட்ட அரச அதிகாரிகள் கடந்த தினம் சிறுமியின் வீட்டிற்கு சென்று பார்வையிட்டுள்ளதுடன் கிராமத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் தெரிவித்த கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## *எரிபொருள் விலையேற்றம் - தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டம்!*

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி அங்கத்தவர்கள் கையில் தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கினிகத்தேனை நகரில் அன்று (23) இரவு சுமார் 7 மணி அளவில் இடம்பெற்றது.


ஆர்ப்பாட்டகாரர்கள் அரசாங்கம் எரிபொருளின் விலையினை உடன் குறைக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தியே குறித்த கையில் தீப்பந்தம் ஏந்திய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரதேசத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டருந்தனர்.

## வாகன இறக்குமதியை தடை செய்த ஒரு நாடு இலங்கை...

21 ஆம் நூற்றாண்டில் வாகன இறக்கு மதியை தடை செய்த ஒரு நாடு என்றால் இலங்கையை குறிப்பிட முடியும். தற்போது வாகனம் என்பது ஆடம்பர பொருள் அல்ல. அத்தியாவசிய பொருளாகும்.

மக்களுக்கு இவ்வாறானா அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதி தடையாகியுள்ள நிலையில் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டின் வாகன இறக்குமதி மீது விதிக்கப்படும் வரி வீதம் மிகவும் அதிகம். வாகனத்தின் விலையை விடவும் நூற்றுக்கு 200 தொடக்கம் 300 வீதம் வரி விதிக்கப்படுகின்றது.

இதனால் தான் நாட்டில் வாகனங்களுக்கான விலை அதிகமாக காணப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் வாகனங்களுக்கான விலை மிகவும் குறைவாக காணப்படுகின்றது.

அந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது குறித்த வரி விதிப்பின் காரணமாக எமது நாட்டில் நான்கு மடங்கு விலை அதிகமாக காணப்படுகின்றது.

தற்போது அந்த விலை அதிகரிப்பை விட வாகன இறக்குமதி தடையின் காரணமாக பல மடங்கு அதிகரித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# சினிமா துளிகள்



## பிக் பாஸ் நடிகை ஷிவானியின் முழு சொத்து மதிப்பு.. இத்தனை கோடியா

விஜய் டிவியில் ஒளிபரப்பான பகல் நிலவு சீரியல் மூலம் நடிகையானவர் இளம் நடிகை ஷிவானி நாராயணன். அதன் பிறகு கடைக்குட்டி சிங்கம், இரட்டை ரோஜா ஆகிய சீரியல்களிலும் கதாநாயகியாக நடித்து வந்தார்.

விஜய் டிவியில் ஒளிபரப்பான பிக்பாஸ் 4வது சீசனில் போட்டியாளராக கலந்துகொண்டு, ரசிகர்கள் மத்தியில் இன்னும் பிரபலமானார். மேலும், தற்போது கமல் ஹாசன், விஜய் சேதுபதி மற்றும் பகத் பாசில் நடித்து வரும் விக்ரம் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் ஷிவான்கியின் முழு சொத்து மதிப்பு குறித்து தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. அதன்படி, பிக் பாஸ் ஷிவான்கியின் முழு சொத்து மதிப்பு மட்டுமே சுமார் ரூ.9 கோடி என தகவல் தெரிவிக்கின்றனர்.



## ஆஸ்கார் போட்டியில் இருந்து வெளியேறிய நயன்தாரா படம்

முன்னணி நடிகையாக இருக்கும் நயன்தாரா, இயக்குனர் விக்னேஷ் சிவனுடன் இணைந்து தயாரித்துள்ள கூழாங்கல் திரைப்படம் ஆஸ்கார் போட்டியில் இருந்து வெளியேறி இருக்கிறது. நயன்தாரா, விக்னேஷ் சிவனுடன் இணைந்து தயாரித்துள்ள கூழாங்கல் திரைப்படம் இந்தியா சார்பில் ஆஸ்கார் போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. சமீபத்தில் ஆஸ்கார் பட்டியலில் இடம்பெற்றுள்ள படங்கள் பட்டியல் ஆஸ்கார் இணையதளத்தில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. இந்த பட்டியலில் கூழாங்கல் திரைப்படம் இடம்பெற்று இருந்தது.

ஆஸ்கார் விருது வழங்கும் விழா அடுத்த வருடம் மார்ச் மாதம் 27-ந் திகதி அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற உள்ளது. ஆஸ்கார் விருதுக்கு 15 படங்கள் இறுதி செய்யப்பட்டு அதில் ஒரு படத்துக்கு சிறந்த வெளிநாட்டு திரைப்படத்துக்கான ஆஸ்கார் விருது வழங்கப்படும். இந்த நிலையில், ஆஸ்கார் வெளியிட்டுள்ள இறுதி பட்டியலில் கூழாங்கல் திரைப்படம் இடம்பெறவில்லை. இதன் மூலம் ஆஸ்கார் போட்டியிலிருந்து கூழாங்கல் திரைப்படம் வெளியேறி உள்ளது. இதுகுறித்து விக்னேஷ் சிவன் தனது சமூக வலைத்தள பக்கத்தில், "இந்த பட்டியலில் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்! இருப்பினும் இவ்வளவு தூய்மையான சினிமாவை கொடுத்ததற்காக பி.எஸ்.வினோத்ராஜ்-க்கு நான் நன்றி கூறுகிறேன். இந்த ஆண்டு ஆஸ்கார் விருதுக்கான அதிகாரப்பூர்வ நுழைவாக எங்கள் படத்தைத் தேர்ந்தெடுத்த இந்திய ஜூரி உறுப்பினர்களுக்கு எனது நன்றிகள். எங்கள் நலம் விரும்புபவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி" என்று தெரிவித்துள்ளார்.






## மகளுக்காக புதிய முடிவு எடுத்த ஸ்ரேயா

தமிழில் முன்னணி நடிகையாக இருந்த ஸ்ரேயா, தனது மகள் ராதாவுக்காக புதிய முடிவு ஒன்றை எடுத்து இருக்கிறார். தமிழ், தெலுங்கு பட உலகில் முன்னணி நடிகையாக இருந்த ஸ்ரேயா திருமணத்துக்கு பிறகும் படங்களில் நடித்து வருகிறார். சினிமா அனுபவங்கள் குறித்து அவர் அளித்துள்ள பேட்டியில், "சினிமா குறித்த எனது எண்ணங்கள் தற்போது மாறிவிட்டன. எனது மகள் ராதா என் படங்களைப் பார்த்து பெருமைப்படும்படியான கதாபாத்திரங்களில் நடிக்க வேண்டும் என முடிவு செய்து விட்டேன்.

நான் நடிக்க ஆரம்பித்து 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் இருபது ஆண்டுகள் வரை நடிப்பேன். இந்த நீண்ட பயணத்திற்கு ரசிகர்களின் அன்புதான் காரணம். இன்னும் 20 ஆண்டுகள் ரசிகர்களின் அன்பை பெற வேண்டும் என ஆசைப்படுகிறேன். அதற்காக எவ்வளவு உழைக்கவும் தயாராக இருக்கிறேன்.

பத்து மாதங்களுக்கு முன் பார்சிலோனாவில் ஒரு மகளை பெற்றெடுத்தேன். அவளுக்கு ராதா என பெயர் வைத்தோம். ராதா வந்த பிறகு எனது வாழ்க்கையே மாறிவிட்டது. குழந்தையை ஜாக்கிரதையாக வளர்க்க பிரத்யேகமாக யோசிக்கிறேன். எனக்கு கதக் நடனத்தை பின்னணியாக வைத்து வரும் படத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசை உள்ளது" என்றார்.



## ராஷ்மிகாவின் ஆபாச காட்சிகளை நீக்கிய படக்குழுவினர்

தமிழ், தெலுங்கு மொழி படங்களில் நடித்து பிரபலமாக இருக்கும் ராஷ்மிகா மந்தனாவின் ஆபாச காட்சிகளை படக்குழுவினர் நீக்கியுள்ளனர்.



தமிழில் கார்த்தி ஜோடியாக சுல்தான் படத்தில் நடித்து பிரபலமான ராஷ்மிகா தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கிறார். தற்போது 2 இந்தி படங்களிலும், ஒரு தெலுங்கு படத்திலும் நடித்து வருகிறார். அல்லு அர்ஜீன் ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடித்துள்ள புஷ்பா படம் சமீபத்தில் தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னட மொழிகளில் திரைக்கு வந்து ஓடிக்கொண்டு இருக்கிறது.

இந்த படத்தில் எல்லை மீறிய சில ஆபாச காட்சிகள் இருப்பதாக சர்ச்சைகள் எழுந்தன. சாமி சாமி பாடலில் பாவாடையுடன் ராஷ்மிகா மந்தனா கவர்ச்சியாக நடனம் ஆடுவதும், அல்லு அர்ஜீனுடன் காருக்குள் நெருக்கமாக அமர்ந்து காதல் செய்யும் காட்சியும், வசனமும் ஆபாசமாக இருப்பதாகவும், இந்த காட்சிகள் பார்வையாளர்களை முகம் சுழிக்க வைப்பதாகவும் எதிர்ப்புகள் கிளம்பின.

இதனால் பலரும் குழந்தைகளுடன் குடும்பத்தோடு படம் பார்க்க வருவதை தவிர்ப்பதாகவும் கூறப்பட்டது. இதையடுத்து சர்ச்சை காட்சிகளை படத்தில் இருந்து படக்குழுவினர் நீக்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## பதிலடி கொடுத்த சமந்தா... பதிவை நீக்கிய ரசிகர்

தமிழ், தெலுங்கு மொழி படங்களில் நடித்து மிகவும் பிரபலமாக இருக்கும் சமந்தா, ரசிகரின் பதிவுக்கு பதிலடி கொடுத்து இருக்கிறார்.



அல்லு அர்ஜீன் நடிப்பில் தமிழ், தெலுங்கில் திரைக்கு வந்து ஓடிக்கொண்டு இருக்கும் புஷ்பா படத்தில் சமந்தா ஒரு பாடல் காட்சியில் கவர்ச்சியாக குத்தாட்ட நடனம் ஆடி இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இந்த பாடலில் இடம்பெற்றுள்ள வரிகள் ஆண்களை கொச்சைப்படுத்துவதாக உள்ளது என்று ஆண்கள் பாதுகாப்பு சங்கம் கண்டனம் தெரிவித்து உள்ளது.

கோர்ட்டிலும் வழக்கு தொடர்ந்துள்ளனர். ஆனாலும் பாடல் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. யூ-டியூப்பில் அதிகமானோர் பார்த்துள்ளனர். படம் வெற்றி பெறுவதற்கு இந்த பாடலும் காரணம் என்கின்றனர். இந்த நிலையில் சமந்தா கவர்ச்சி நடனம் ஆடியதை வலைத்தளத்தில் ரசிகர் ஒருவர் கடுமையாக விமர்சனம் செய்தார்.

"விவாகரத்து செய்து வாழ்க்கையை கெடுத்து கொண்ட குத்தாட்ட நடிகை சமந்தா, ஜென்டில்மேனிடம் இருந்து ரூ.50 கோடியை வரியில்லாமல் திருடிக்கொண்டார்" என்று அவர் கூறியுள்ளார். நாக சைதன்யாவை ஜென்டில்மேன் என்று குறிப்பிட்டு அவரை விவாகரத்து செய்ய சமந்தா ரூ.50 கோடி பெற்றதாக அந்த ரசிகர் விமர்சித்து இருப்பதாக வலைத்தளத்தில் தகவல் பரவி உள்ளது.

அந்த விமர்சனத்தை பார்த்த சமந்தா "கடவுள் உங்கள் ஆன்மாவை ஆசிர்வதிக்கட்டும்" என்று டுவிட்டரில் பதிலடி கொடுத்துள்ளார். அவதூறு செய்தவர் மீது கோபப்படாமல் கனிவான முறையில் சமந்தா பதில் சொன்னது ரசிகர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. மேலும் சமந்தாவின் பதிலுக்கு அந்த ரசிகர் தன்னுடைய பதிவை நீக்கி விட்டார்.

# ஆயுதக் கட்சிகளின் ஒன்றிணைவே தமிழினத்திற்கான தீர்வைப் பெற்றுத்தரும்



ஏழு தசாப்தங்களுள் மூன்று தசாப்தங்கள் இலங்கை யுத்த சூனியமாக திகழ்ந்தது என்பது அனைவருக்கும்தெரிந்தவிடயம். உலகளாவிய ரீதியில் தமிழினத்தின் விடுதலைக்காக ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப், எல்ரீரீஈ, ஈரோஸ் போன்ற இயக்கங்கள் கடந்த காலங்களில் வலுவானதொரு இயக்கங்களாக இலங்கை அரசினை எதிர்த்து வடகிழக்கில் தமக்கானதொரு தனி இராச்சியத்தினையும் நிறுவியிருந்தனர். அது ஒற்றுமையாகச் செயற்பட்ட காலப்பகுதி. அதன் பின்னர் குறித்த ஒற்றுமையினைச் சீர்குலைப்பதற்கு இலங்கையரசு சதிகளை மேற்கொண்டு குறித்த ஆயுதக்கட்சிகள் தமக்கிடையே மோதிக்கொள்ளும் அளவிற்கு நிலைமைகளை உருவாக்கியது. அதனால் மூன்று தசாப்தங்கள் இலங்கை அரசுடன் ஆயுதமேந்திப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் தனித்து விடப்பட்டனர். இலங்கையரசுடன் ஏனைய இயக்கங்கள் இணைந்து கொண்டு ஈழப்போராட்டத்திற்கான அந்த இலட்சியக் கனவை சிதைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் காரணமாக தமிழ் மக்களுக்கான அந்த ஈழ இராச்சியக் கனவு சிதைந்துபோனது.

ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையரசாங்கம் தாம் நினைத்தபடியே தமது செயற்பாடுகளை வடகிழக்கில் முடக்கிவிட்டுள்ளன. வடகிழக்கு இணைப்பு என்பது துண்டிக்கப்பட்டு இரண்டு வெவ்வேறு மாகாணங்களாக அரசாங்கத்தினால் திட்டமிட்டுப் பிரிக்கப்பட்டது. இணைந்திருந்த வடகிழக்கில் அன்று முதலமைச்சராக ஈபிஆர்எல்எப் அணியைச் சேர்ந்த வரதராஜப்பெருமாள் அவர்கள் இருந்தார் என்பது வரலாறு. இணைந்த வடகிழக்கினை பிரித்ததையடுத்து குறித்து வரதராஜப்பெருமாள் கூட அதற்கு எதிராகக் குரல்கொடுக்கவில்லை. அவர் ஏனோ தானோ என்று அரசாங்கத்தோடு ஒன்றிணைந்து செயற்பட்டவராகவே தற்போதும் செயற்பட்டு வருகின்றார். சிறிதுகாலம் இந்தியாவின் ஒரிசாவில் மறைந்திருந்த இவர் தற்போது மீண்டும் யாழ் மண்ணில் தனது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

வடகிழக்கு இணைந்த தேர்தலை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு தமிழ்த் தரப்புக்கள் முன்வந்து போராட்டங்களை நடத்தவில்லை. இணைந்த வடகிழக்கு பிரிந்ததாகவே மாகாண சபைத் தேர்தல்களும் இடம்பெற்று வந்தது. ஆகவே பதவி மோகங்களுக்காகவே இவர்கள் செயற்பட்டார்கள் என்பது இதிலிருந்து புலப்படுகின்றது. இன்றைய நவீன யுகத்தில் குறித்த ஆயுதக்கட்சிகளுடைய ஒற்றுமையே இந்த நாட்டிற்கு பெரிதும் தேவைப்படுகின்றது. ஒருவரையொருவர் விரல்காட்டி துரோகிகள் என்று கூறுவதை விட அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ்த்தரப்புக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஏகோபித்த குரல் எழுப்புவதில் தவறு கிடையாது.

தமது சுயலாப அரசியலை செய்வதற்காகவே ஒவ்வொரு கட்சித் தரப்பினரும் மக்கள் நலனில் அக்கறைகொள்ளாது செயற்பட்டு வருகின்றனர். காரணம் என்னவென்றால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தான் மக்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்கிற நிலை இல்லை. ஒரு மக்கள் புரட்சி என்பது தானாகவே உருவாகி ஒரு அரசாங்கத்தை திணறடிக்கின்ற ஒரு சக்தியாகும். ஆகவே மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டி அரசாங்கத்தின் தற்போதைய நடவடிக்கைகளை எதிர்த்துச் செயற்படுகின்றபோது அந்தப் போராட்டத்திற்கு நிச்சயம் ஒரு வெற்றி கிடைக்கும். பல இலட்சம் உயிர்கள் காவுகொள்ளப்பட்டபோதிலும், தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தமிழினம் சிக்கித்தவிக்கின்ற போதிலும், யுத்தம் நிறைவடைந்தும் தமிழ் மக்களுக்குத் தீர்வு இல்லையென்றால் அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான கருணா, பிள்ளையான் அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், கேபி இவர்களைப்போன்று தமிழ் பேசும் முஸ்லீம் தரப்பு அரசியல்வாதிகள், அரசாங்கம் சிறுபான்மை இனத்திற்குச் செய்த அநீதிகளை மறந்து அல்லது மறப்போம் மன்னிப்போம் என்கிற தொனியில் செயற்படுகின்றதன் விளைவு. இந்த அரசுடன் ஒட்டுண்ணிகளாகச் செயற்படுகின்ற இவர்களால் தமிழினத்திற்கே ஒரு அவமானமாக அமைந்து. இன்று வடகிழக்கில் நிம்மதியாக வாழ முடியாத சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அரசாங்கம் சாதிக்கவேண்டிய ஒன்றை தற்போது சாதித்துக்காட்டியுள்ளது. இவ்வளவு காலமாக சிங்களப் பெரும்பான்மை இனம் சிறுபான்மையினரின் ஆதரவின்றி தேர்தல்களில் வெற்றிபெற்ற வரலாறு கிடையாது. ஆனால் தனிச்சிங்களவர்களால் ஆட்சியமைக்கப்பட வேண்டும் என்ற கோசத்துடன் ஜனாதிபதி கோட்டாபய அவர்கள் தேர்தலில் களமிறங்கினார். அதற்காகவே பொதுபலசேனா, இராவணபலய போன்ற இனவாதக் கட்சிகளைக் களமிறக்கி தனிச்சிங்களப் பெரும்பான்மையுடன் நாம் வெற்றி பெற்று, இந்த நாட்டில் சிறுபான்மை சமுதாயம் தமக்கு அடிமைகளாகவே செயற்படவேண்டும் என்பது சிங்கள பேரினவாதிகளின் சித்தாந்தம்.

அவ்வாறு செயற்படுவதற்கு சிறுபான்மை இனமாக இருக்கக்கூடிய முஸ்லீம்களையும் எதிரியாக்கவேண்டும். விடுதலைப்புலிகளுடனான போர் உச்சக்கட்டத்தை அடைந்தபோது முஸ்லீம் அமைச்சர்களையும் புலனாய்வாளர்களையும் தம்வசம் வைத்துக்கொண்ட இலங்கையரசு, மெல்ல மெல்ல பாராளுமன்றத் தேர்தல் நெருங்கும்போது அவர்களை ஓரங்கட்டத்தொடங்கியது. அதில் ஒன்றுதான் சஹ்ரானினது ஈஸ்டர் குண்டுத்தாக்குதல். இவ்வாறான ஒரு தாக்குதலை இந்நாட்டில் நிகழ்த்துவதன் ஊடாக முஸ்லீம் தீவிரவாதிகள் தான் இந்த தாக்குதலின் சூத்திரதாரிகள் என்பது திட்டவட்டமாக தெரிய வந்தவுடன், அவர்களை ஓரங்கட்டுவது என்பது மிக சுலபமான விடயமாக அமைந்து விட்டது.

அதன் பின்னர் அவர்களில் பலர் கைது செய்யப்பட, முன்னாள் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரைக் கைது செய்து அரசு சிறையில் அடைத்தது. தற்போது ஒரே நாடு ஒரே சட்டம் என்கிற செயலணிக்கு தலைமை தாங்கும் ஞானசார தேரரை வைத்து தொடர்ந்தும் இந்த நாட்டில் இனவாத செயற்பாடுகளை ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான இந்த அரசு முன்னெடுத்து வருகிறது.

தேசியப்பட்டியலில் நீதியமைச்சராக வந்தவர் ஏற்கனவே பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் நெருங்கிய தொடர்புடையவர். இவர்களைத் தவிர்த்து பாராளுமன்றத்திற்குத் தெரிவான எந்தவொரு முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பதவிகள் வழங்கப்படவில்லை. வரலாற்றில் இதுவே முதல்தடவை. தற்போது இலங்கைத்திருநாட்டில் இனவாதம், மதவாதம், தேசியவாதம் இந்த மூன்றையும் வைத்து அரசாங்கம் தொடர்ந்தும் சிறுபான்மை சமுதாயத்தை அடக்குகின்ற செயற்பாடுகளையே முடக்கிவிட்டுள்ளது.

ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடிய விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரைகுத்தி சந்தர்ப்பவாத அரசியலை இந்த அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. அதுவே உண்மை. திம்பு முதல் டோக்கியோ வரையான பேச்சுக்களிலும் என்ன நடந்தது என தமிழ் ஆயுதக்கட்சிகளுக்கு தெரிந்த விடயமே. இது பற்றி மேலும் கூறவேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறானதொரு செயற்பாட்டை சிறுபான்மையினரின் மீது அரசாங்கம் கட்டவிழ்த்துள்ளதுடன் தொடர்ந்தும் தாமதிப்பதுடன் ஊடாக அல்லது அரசாங்கம் எம்மை ஏமாற்றுகிறது எனத் தெரிந்தும் ஆட்சிமாற்றங்கள் ஏற்படுகின்ற போது தீர்வு கிடைக்கும் என எண்ணிக்கொண்டு காலங்களைக் கடத்துவதில் பயனில்லை. ஆகவே சுயலாப அரசியலை புறந்தள்ளிவிட்டு இந்நாட்டில் மக்கள் புரட்சியொன்றை உருவாக்கி அதன் ஊடாக எமது சுயநிர்ணய உரிமையோடு கூடிய வடகிழக்கில் சமனான ஆட்சியை நிறுவுவதற்கான வழிகளை அமைக்க வேண்டும். ஆயுதக்கட்சிகள் தமிழினத்திற்காகப் போராடியபோதெல்லாம் அனைத்துத் தமிழ் மக்களையும் ஒரே தராசில் தான் இலங்கை அரசாங்கம் பார்த்து வந்தது. ஆயிரக்கணக்கான சோதனைச்சாவடிகளைத் தாண்டித்தான் கொழும்புக்குத் தமிழினம் செல்லவேண்டும். அதுவும் இரண்டு மூன்று நாட்கள் காத்திருக்கவேண்டிய நிலை. வடகிழக்கில் பொருளாதாரத் தடை காணப்பட்டபோதிலும் மக்கள் தமது வாழ்வாதாரத்தை செவ்வனவே செய்து வந்தனர். மின்சாரம் இன்றி வருடக்கணக்கில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தார்கள்.

தொலைத்தொடர்பு வசதிகள், எரிபொருள் வசதிகள் குறித்த பிரதேசங்களில் அறவே இல்லை. ஒரு லீற்றர் பெற்றோலின் விலை பத்தாயிரமாக இருந்தது. மண்ணெண்ணெயில் தான் வாகனங்கள் இயங்கியது. அப்படியிருந்தும் எம் மக்களுடைய வீரம் குன்றிப்போகவில்லை. போக்குவரத்துச் சாலை என்பது மிகமோசமான நிலையில் காணப்பட்டது மட்டுமன்றி திட்டமிட்டு அரசாங்கம் வான் தாக்குதல்களின் மூலம் பாதைகளையும், பாலங்களையும் சிதைத்தது. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் விசவாயு அடித்து, கொத்தணிக்குண்டுகளின் மூலமும் கொன்று குவித்தனர். 1983 ஜூலைக் கலவரம் தொடக்கம் 2009 முள்ளிவாய்க்கால் வரை தமிழினம் கண்ட சோகத் துயரங்கள் சொல்லில் அடங்காதவை. இவற்றையெல்லாம் எழுந்தமானத்தில் மறந்துவிடுவது என்பது முடியாத காரியம். இவற்றை மறப்பவன் தமிழன் கிடையாது. குற்றம் சாட்டுகிறவர்கள் குற்றஞ்சாட்டிக்கொண்டேயிருப்பார்கள்.

ஆயுதப்போராட்டத்தை அருவறுப்பாகப் பார்க்கின்றவர்களும் இருக்கிறார்கள். ஆயுதத் தரப்பால் பாதிக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அல்பிரட் துரையப்பா தொடக்கம் லக்ஸ்மன் கதிர்காமர் வரை நூற்றுக்கணக்கானப் புத்திஜீவிகள் அரச தரப்பினராலும், ஆயுத இயக்கங்களாலும் சுட்டுக்கொல்லப்பட்டது ஆதாரபூர்வமான உண்மை. இதில் யாரும் தாம் குற்றவாளிகள் இல்லை என்று கூறிவிட முடியாது. எந்த நோக்கத்திற்காக ஆயுதம் ஏந்திப்போராடப் புறப்பட்டீர்களோ அந்த நோக்கத்திற்காகத் தொடர்ந்தும் போராடுங்கள். சாட்டுப்போக்குகள் சொல்லிக்கொள்வதில் அர்த்தம் இல்லை. கழுத்துக்குமேல் வெள்ளம் வந்த பின்னர் சாண் என்ன முழம் என்ன. இதில் நீந்திக் கரைசேர்வது அல்லது மடிந்துவிடுவது என்கிற நிலை தான். ஆகவே நாம் நீந்திக் கரை சேர்பவர்களாக எமது செயற்பாடுகளைச் செய்ய வேண்டும். கரையான் அரிப்பது போன்று தமிழர் பிரதேசங்கள், அகழ்வாராய்ச்சிகள் என்கிற போர்வையில் நிலங்களும், வளங்களும் சிங்களப் பேரினவாதிகளால் சுரண்டப்படுகின்றது.

காரணமின்றிக் கைதுகள் இடம்பெறுகிறது. மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் இடம்பெறுகிறது. நாட்டின் முதுகெழும்பாகச் செயற்படுகிறவர்கள் ஊடகவியலாளர்கள். அவர்களின் குரல்களும் நசுக்கப்படுகின்றது. அப்படியாகவிருந்தால் எப்படி நாம் சுதந்திரமாக வாழ்வது. அரசாங்கத்தின் ஒட்டுண்ணிகளாக செயற்படுகின்ற அரசியல் தலைமைகளே! சுதந்திரம் என்பதன் மூலம் நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள். இத்தனை அடக்குமுறைகளுக்குள்ளும் வாழ்வது தான் சுதந்திரமா? அல்லது இத்தனை அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடி எமக்கான விடுதலையினைப் பெறுவது சுதந்திரமா? இந்த பூமிப்பந்தில் இலங்கையை அனைத்து நாடுகளும் தமது கைப்பொம்மையாகப் பயன்படுத்துகிறது. இதனைப் புரிந்துகொண்டு நாம் செயற்படவேண்டும். சுயலாபம் கருதாமல் தனக்கானதொரு சொத்துக்களை சேகரிக்காமல் இறுதிவரை எதிரியுடன் களமாடியவர்தான் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். நிச்சயமாக அவர் ஒரு மாவீரர். உலகமெங்கும் பரந்து வாழ்கின்ற மக்கள் மத்தியில் இன்றும் மறக்கப்படாத ஒருவர். புலம்பெயர்ந்த தளத்திலும் இன்றும் அவர் நாமம் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அரசியல் ரீதியான அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்றுக்கொண்டேயிருக்கிறது. ஆனால் இலங்கையில் மட்டும் தடைவிதிக்கப்பட்டு அவர்களது அனைத்து செயற்பாடுகளும் முடக்கப்பட்டிருக்கிறது. தமது தேவைக்காக மாத்திரம் விடுதலைப்புலிகளுடன் கைகோர்த்து செயற்பட்ட அன்றைய அரசாங்கம், தமது தேவைகள் முடிந்தவுடன் அவர்களை ஓரங்கட்டியது. அதைப்போல ஏனைய ஆயுத இயக்கங்களையும் ஓரங்கட்டியது. இறுதியாக கருணா - பிள்ளையான் பிளவே விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட ஒரு பலமாகவும் அமைந்தது.

தற்போதைய சூழலில் விடுதலைப்புலிகள் அரசியல் களத்தில் வருவதை தமிழ்த்தலைமைகள் ஏற்க மறுக்கின்றனர் அவர்கள் வந்தால் தமது அரசியல் நடவடிக்கைகள் இல்லாமல் போய்விடும் அல்லது தாம் ஓரங்கட்டப்பட்டுவிடுவோம் என்பதே அவர்களின் பயம். இன்று நாம் மறைமுகமான ஒரு நிழல் யுத்தத்தை எதிர்கொள்ளத் தயாராகவேண்டும்.

எம்மை நாம் பிரசித்தப்படுத்திக்கொண்டு அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்போமாக விருந்தால் எமது நிலைமை மிகமோசமடையும். ஆயுதக்கட்சிகளுடைய இலக்கு அல்லது அவர்களின் பெயர்களின் உள்ளடக்கம் என்பது ஈழக்கோரிக்கையினை முன்வைப்பதேயாகும்.

குறிப்பாக,

LTTE - The Liberation Tigers of Tamil Eelam
TELO - The Tamil Eelam Liberation Organization
EPRLF – The Eelam People's Revolutionary Liberation Front
ENLF - The Eelam National Liberation Front
EPDP - The Eelam People's Democratic Party

**இரணியன்**

**11ஆம் பக்கம் பார்க்க...**

5அம் பக்க தொடர்ச்சி...

எந்த அமெரிக்கா சவேந்திர சில்வாவை நாட்டுக்குள் வரக்கூடாது என்று பயணத் தடை விதித்ததோ அதே அமெரிக்காவில் கோட்டாபய ராஜபக்ஷ ஐ.நா பொதுச்செயலரை சந்திக்கிறார். ஐ.நாவில் உரை நிகழ்த்துகிறார். ஏறக்குறைய இதே காலப்பகுதியில் தான் சற்று முன்னதாக அவருடைய தமையனார் மஹிந்த ராஜபக்ச இத்தாலிக்கு போயிருந்தார். அங்கேயும் அவர் ஓர் அனைத்துலக மாநாட்டில் உரை நிகழ்த்தினார்.தமிழர்கள் இங்கே ஒரு முக்கியமான விடயத்தை கவனிக்க வேண்டும். இந்த இரண்டு சகோதரர்களும் அரசியல் தீர்மானம் எடுத்து வழிநடத்திய ஒரு யுத்தத்தில் உத்தரவுக்கு கீழ்படியும் கருவியாக செயல்பட்ட ஒரு தளபதியை அமெரிக்கா நாட்டுக்குள் வரக் கூடாது என்று தடை செய்திருக்கிறது. அவரைப் போல மேலும் சில தளபதிகளை மேலும் சில மேற்கு நாடுகளும் குறிப்பாக ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் தடை செய்திருப்பதாக அறியமுடிகிறது.

ஜனாதிபதியின் மூளை என்று கருதப்படும் வியத்மக சிந்தனைக் குழாத்தின் இணையதளத்தில் கலாநிதி பாலித கோகன்ன-இப்பொழுது சீனாவுக்கான தூதுவராக இருப்பவர் -ஆற்றிய உரை ஒன்று உண்டு. அதிலவர் அவ்வாறு தமது தளபதிகள் வெளிநாடுகளில் படிக்கும் தமது பிள்ளைகளை சந்திக்க முடியாதிருப்பதைக் குறித்து கருத்துக் கூறியுள்ளார்.இவ்வாறு தளபதிகளை நாட்டுக்குள் வரவிடாது தடுக்கும் மேற்கத்தைய அரசுகள் அந்த தளபதிகளுக்கு உத்தரவிட்ட அரசியல் தலைவர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதை எப்படிப் பார்ப்பது? ஏய்தவர்களை தண்டிக்காமல் அம்புகளை தண்டிக்கும் இந்த அரசியலில் இருந்து தமிழ் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அமெரிக்காவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை அந்நாட்டின் அரசுப் பிரதானிகள் சந்திக்கவில்லை என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். மேற்கு நாடுகள் இலங்கை தொடர்பாக எவ்வாறான அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றன என்பதை இது உணர்த்துகிறது.ஓர் அரசுடைய தரப்பாக சிங்கள மக்களுக்குள்ள வசதி வாய்ப்புகளையும் இது காட்டுகிறது.இந்த அரசியலை சரியாக விளங்கிக் கொண்டால்தான் ஜனாதிபதியின் அழைப்பை எவ்வாறு அணுகுவது என்பது குறித்து தமிழ் டயாஸ்பொற ஒரு பொருத்தமான முடிவை எடுக்கலாம்.

ஜனாதிபதியின் அழைப்புக்கு தமிழ் டயாஸ்பொறவிலுள்ள எட்டு அமைப்புகள் பதில் வினையாற்றியுள்ளன.இது விடயத்தில் தமிழ் டயஸ்போறா ஒரே கட்டமைப்பாக இல்லை.தமிழ் டயஸ்போறா எனப்படுவது ஒன்றுபட்ட ஒரு கட்டமைப்பல்ல.அதில் பல அடுக்குகள் உண்டு. பல்வேறு கருத்து நிலைகள் உண்டு. இந்த பல்வகைமையை ரணில் விக்கிரமசிங்க தனக்கு வசதியாகக் கையாண்டார்.இப்போதுள்ள அரசாங்கமும் அவ்வாறு கையாளத்தக்க வாய்ப்புகள் அதிகம் உண்டு.தாயகத்து கட்சிகள் செயற்பாட்டாளர்களுக்குள்ள அதே நோய் டயஸ்போறாவிலும் உண்டு. இது விடயத்தில் டயஸ்போறா தன் பலமுணர்ந்து.தேவையுணர்ந்து தீர்க்கதரிசனத்துடன் ஒன்றுபட்டு முடிவெடுக்குமா?

07ஆம் பக்க தொடர்ச்சி...

தேர்தல் மேடைகளில் முஸ்லிம் தலைமைகள் கொடுத்த வஹ்தா நிறைவேற்றப்பட வேண்டும். என்பதை சுனாமி தினமன்ற இன்றும் நினைவுபடுத்துகிறேன். இது போன்றே மருதமுனை வீட்டுத்திட்டமும் உரியவர்கள் அல்லது தகுதியானவர்களுக்கு வழங்க அன்றைய ஜனாதிபதி மைத்திரி கட்டளை விடுத்தும் வீட்டுத்திட்ட இடங்களை பார்வையிட்ட அமைச்சர் நாமல் அதிகாரிகளுக்கு இந்த வீடுகளை வழங்க ஆலோசனை வழங்கியும் இந்த நிமிடம் வரை அதற்கான எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருப்பதில் பலமில்லியன் ரகசியங்கள் புதைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

மரணித்துப்போன உயிர்களை நினைத்து ஆலயங்களில் இன்று பூஜைகளும். விகாரைகளில் போதனைகளும். தேவாலயங்களில் ஆராதனைகளும். பள்ளிவாசல்களில் துஆ பிரார்த்தனைகளும் நடைபெறுகிறது. இனவாதம் கடந்து போன மதவாதம் மாண்டுபோன சுனாமி அன்று நாங்கள் இருந்த ஒற்றுமை தொடர்ந்தால் நல்லவைகள் நாலு நடந்திருக்கும் நமது நாட்டில். அன்னதானங்கள் பல இடங்களில் இன்று நடைபெறுகிறது. கல்லறைகள். கப்ருகள் கண்ணீரால் நனைகிறது. அனைத்து ஆத்மாக்களும் சாந்தியடைய பிராத்தனைகள்.

10ஆம் பக்க தொடர்ச்சி...

அனைத்து ஆயுதக்கட்சிகளும் ஈழத்தை மையமாகக்கொண்டு தமது பெயர்களை வைத்துள்ள அதேநேரம். அதே இலக்கினை நோக்கியேதொடர்ந்தும்நகரவேண்டும்அல்லது அவர்களின் பெயர்களில் மாற்றங்களைக் கொண்டுவந்து தாம் ஈழத்திற்காக தொடர்ந்தும் போராட முடியாது என்பதை மக்களின் முன்னிலையில் ஒத்துக்கொண்டு. தொடர்ந்து அரசின் கைக்கூலிகளாக செயற்படுவது வரவேற்கத்தக்கது. ஈழம் என்ற முத்திரையை தமிழ் மக்களின் முன் நிறுத்தி மாவீரர்களின் முதுகில் ஏறி சவாரி செய்ய நினைப்பது. தமிழினத்திற்கு நீங்கள் சாபக்கேடானவர்களாகச் செயற்படுகின்றீர்கள் என்பதேயாகும். தானும் செயற்படாது செயற்படுபவனையும் செயற்படவிடாது ஒட்டியிருக்கும் நீங்கள் கீழ்த்தனமானதொரு பழமொழிக்குச் சொந்தக்காரர்கள் ஆகின்றீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஆகவே இன்றைய சந்தர்ப்பவாத அரசியலை அல்லது இனவாத அரசியலை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஒரே குடையின் கீழ் தமிழ் அரசியல் தலைமைகள் இறுதிச்சந்தர்ப்பமாக எண்ணி செயற்பட முன்வரவேண்டும். இல்லையேல் அடுத்துவருகின்ற தமிழ்த் தலைமுறை பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். உங்களைப் பார்த்து கேள்விகேட்பது மட்டுமன்றி உங்கள் மீது குரோதம் கொண்டு உங்களை அழித்தொழிக்கின்ற கடந்த கால அரசியல் வரலாற்றுக்குள் தள்ளப்படுவீர்கள். மீண்டும் யுத்த சூனியத்திற்குள் இந்த நாடு அகப்பட்டுக்கொள்ளும். ஆகவே ஒற்றுமையே பலம் என்பதை நிரூபிப்பதற்கு விரைந்து செயற்படுவது மிக அவசியம். இந்த சந்தர்ப்பத்தில் மூலோபாயம் - தந்திரோபாயம் இந்த இரண்டையும் பயன்படுத்தினால் மட்டுமே எமது இலட்சியக் கனவான ஈழத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியும். அதற்குத் தற்போது காலம் கனிந்துள்ளது என்பதையே தற்போது எம்மால் கூறிக்கொள்ள முடியும்.

# விவேகானந்தரின் பொன்மொழிகள்

**இருதயம் விரிவடைந்துள்ள இடத்தில்தான் உண்மை ஞானம் உதிக்கும். அந்த உண்மை ஞானம்தான் நம்பிக்கை.**

**அடக்கப்படாமல் உள்ள மனமும், அறவழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச் சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலகபந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.**

**கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான்.**

**காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.**

**எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவரையே நான் மகாத்மா என்பேன்.**

**அன்பு நெறியிற் சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும்.**

**கோழைகளே பாவ காரியங்களைப் புரிந்திடுவர். தைரியமுடையோர் ஒருக்காலும் பாவம் செய்யார்.**

**பலமற்ற மூளையில் நாம் எதையுமே செய்ய இயலாது. அதனால் நாம் அதைப் பலப்படுத்த வேண்டும்.**

**அச்சமே நமக்குத் துயரத்தைத் தருவது. அச்சமே கேட்டை விளைவிப்பது. அச்சமே மரணத்தைத் தருவது. நமது உண்மை இயல்பை நாம் அறிந்து கொள்ளாமல் இருப்பதனால் தான் நமக்கு அச்சம் ஏற்படுகின்றது.**

**இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.**

**முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக் கொண்டால், எஜமானாகும் தகுதி பின்னர் தானாகவே வரும்.**

**அன்புடையவனே வாழ்பவன். சுயநலமுடையவனோ செத்துக் கொண்டிருக்கின்றான் என்றே பொருள்.**

**சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமையாகும்.**

**எந்த வேலையாக இருந்தாலும் அதைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளியாவான்.**

**தன்னை அடக்கப் பழகிக்கொண்டவன் வேறு எதற்கும் சிக்கமாட்டான். அத்தகைய தகுதி உள்ளவனே உலகில் நன்றாக வாழத் தகுதியுள்ளவன்.**

**பலமே வாழ்வு, பலவீனமே மரணம்.**

**தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.**

**உறுதியுடன் இரு, அதற்கு மேலாகத் தூய்மையானவனாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.**

**வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஏதோ ஓரிடத்தில்! அளவற்ற நேர்மையும் அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். அந்த குணங்கள் தாம். அவர் அடைந்த சிறந்த வெற்றிகளுக்கு காரணமாகும்.**

**உலகத்திற்கு மிக முக்கியமானது தண்ணீர். ஆனால் சுகாதாரமற்ற நீரினால் ஒரு மணி நேரத்திற்கு 200 குழந்தைகள் இறக்கின்றனர்.**

**மனித மூளையில் 70% நீர்தான்.**

**நான் மூச்சு வெளி விடுவதில் 1கப் நீர் (250 மி.லி.) வெளியேறுகின்றது.**

**ரத்தத்தின் 80% நீர்தான்.**

**எலும்புகளில் 22% நீர்தான்.**

**சத்துக்களையும், ஆக்ஸிஜனையும் உடலில் திசுக்களுக்கு கொண்டு செல்வது நீர்தான்.**

**தசைகளின் 75 % நீர்தான்.**

**உணவை சக்தியாக மாற்ற உதவுவது நீர்தான்.**

**ஆக்ஸிஜனை மூச்சுக்காக ஈரப்படுத்துவது நீர்தான்.**

**தேவையான அளவு தண்ணீர் குடிப்பது குடல் புற்றுநோய், சிறுநீரக புற்றுநோய், மார்பக புற்று நோய் இவற்றினை தவிர்க்கும்.**

**உடலிலுள்ள கிருமிகளை வெளி தள்ளுவது நீர்தான்.**

**அநேகருக்கு தேவையான அளவு தண்ணீர் குடிக்கும் பொழுது முதுகு வலி, மூட்டில் வலி நீங்குகின்றது.**

**அதிக நீரை ஒரே நேரத்தில் குடிப்பது உடலில் சோடியத்தினை குறைத்து பல பிரச்சனைகளை ஏற்படுத்தும்.**

**இத்தகு பாதிப்பு அநேகமாகமாக விளையாட்டு வீரர்களிடையே காணப்படும்.**

**சுத்தமில்லாத நீரால் பலவகை புற்றுநோய் பாதிப்புகள் ஏற்படும்.**

**குழாய் நீரில் அதிக அளவு குளோரின் இருந்தால் முடி, சருமம் இவை அனைத்தும் பாதிக்கப்படும்.**



# பல்சுவை கதம்பம்



## முகம் அழகாகவும் வெள்ளையாக மாறுவதற்கு சில அழகு குறிப்புகள் !!



கற்றாழை ஜெல்லைக் கொண்டு தினமும் முகத்தை மசாஜ் செய்து ஊற வைத்து கழுவி வந்தால் முகத்தில் வரும் பருக்கள் மற்றும் கரும்புள்ளிகள் நீங்கி முகம் அழகாகவும் வெள்ளையாக மாறுவதை காணலாம்.

கசகசாவை பாலில் சேர்த்து 15 நிமிடத்திற்கு ஊறவைக்கவும். பின் அதை மிக்சியில் சேர்த்து மைய அரைத்து அதை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவினால் முகம் அழகான தோற்றத்தை பெறுவதுடன் கரும்புள்ளிகள் மறைந்து முகம் பளிச்சிடும்.

இரவில் படுக்கும் போது சூரியகாந்தி விதையை பாலில் ஊற வைத்து, மறுநாள் காலையில் அதில் சிறிது குங்குமப்பூ மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து கலந்து அரைத்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து பின் கழுவ வேண்டும்.

சிலரது முகம் எப்போதும் எண்ணெய் வடிந்தது போல் பொலிவு இல்லாமல் இருக்கும். அவ்வாறு இருப்பவர்கள் கனிந்த தக்காளிப் பழத்தை தோல் நீக்கி அதனை நன்கு அரைத்துக் கொள்ளவும். அதில் சிறிதளவு பால் கலந்து பேஸ்ட் போல செய்து முகத்திற்கு பூசவும். இதனால் முகத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசை நீங்குவதோடு முகம் பளிச்சென்று மாறிவிடும்.

தேனில் சிறிது எலுமிச்சை சாறு மற்றும் தயிர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து கழுவினால், முகம் ஆரோக்கியமாகவும், பளிச்சென்றும் காணப்படும்.

**உன் விழி எனும் சிறையினில்**
**நான் வந்து உறங்கிட**
**உன் அமுதூட்டும் பேச்சினால்**
**நீ என்னை கட்டி அணைத்திட**
**உன் மௌனத்திலும் உன் உதடுகள்**
**என் பெயரை சொல்லிட**
**உன் இதய கூட்டுக்குள் இந்த**
**ஏழைக்கு ஒரு இடம் வேண்டும்**
**அன்பே!!!**



## அடிக்கடி உடைத்த கடலை சாப்பிட்டு வருவதால் கிடைக்கும் பயன்கள் !!



கொழுப்பில்லாத உணவுகளை அறவே தவிர்த்து, புரதம் நிறைந்த உணவுகளை அதிகம் சாப்பிடுவதால் இதய நலம் மேம்படுத்துகிறது.

புரத சத்து அதிகம் நிறைந்த உடைத்த கடலை பருப்புகளை அடிக்கடி சாப்பிடுவதால் இதய நலம் மேம்பட்டு, ஆயுளை அதிகரிக்கிறது.

உடைத்த கடலை பருப்பில் உள்ள எளிதில் ஜீரணம் ஆக கூடிய புரத சத்து மற்றும் நார்ச்சத்து நாம் சாப்பிடும் உணவு நன்கு செரிமானமாக உதவுகிறது. மேலும் உடலில் உள்ள கழிவுகளை நீக்கி வெளியேற்றவும், உள்ளுறுப்புகளை சுத்தம் செய்து ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

உடைத்த கடலையில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதச் சத்து அதிகமுள்ளது. புரதமானது செல்கள், திசுக்கள், எலும்புகள், தசைகளின் உருவாக்கத்திற்கு மிகவும் அவசியமானது.

தோலில் ஏற்பட்டிருக்கும் சொறி, சிரங்கு, படை பாதிப்புகளை கூடிய விரைவில் நீக்கும் தன்மை இந்த உடைத்த கடலை பருப்பிற்குஉண்டு. தோலில் சுருக்கங்கள் ஏற்படும் தன்மையும் நீங்கும்.

இப்பருப்புகளை அதிகம் சாப்பிட்டு வருபவர்களுக்கு தலைமுடி உதிர்தல் குறைபாடு நீங்குகிறது. மிக இளம் வயதிலேயே தலை முடி நரைத்தல் போன்ற பிரச்சனையும் போக்குகிறது.

உடைத்த கடலை பருப்புகளை கருவுற்றிருக்கும் பெண்கள் சரியான விகிதத்தில் உட்கொண்டு வருவது, அவர்களுக்கும் அவர்கள் வயிற்றில் வளரும் கருவிற்கும் நன்மையை அளிக்கும். பிரசவ நேரத்தில் ஏற்படும் வலி மற்றும் உடல் சோர்வை போக்க இப்பருப்புகள் உதவுகின்றன.

## கண்களின் பார்வை திறனை மேம்படுத்த உதவும் கறிவேப்பிலை !!

கறிவேப்பிலையில் "வைட்டமின் ஏ" சத்து நிரம்பியுள்ளது. இந்த "வைட்டமின் ஏ" நமது கண்களின் பார்வைத் திறனை மேம்படுத்த மிகவும் உதவுகிறது.

வலிமையான மற்றும் கருமையான முடியைப் பெறுவதற்கு கறிவேப்பிலை பயன்படுகிறது. மேலும் தலை முடியில் உள்ள பொடுகு உள்ளிட்ட பல பிரச்சனைகளை நீக்கவும் கறிவேப்பிலை பயன்படுகிறது.

தோல்களில் ஏற்படும் அலர்ஜிகள், நோய்கள் போன்றவற்றை குணப்படுத்த கறிவேப்பிலை பயன்படுகிறது. இரத்த சோகையினால் பாதிக்கப்பட்டவர்கள் கருவேப்பிலையை சாப்பிட்டு வருவது மிகவும் நல்லது. ஏனெனில் கறிவேப்பிலையில் இரும்புச்சத்து அதிகமாக உள்ளது.

ரத்தத்தில் சர்க்கரையின் அளவை சீராக வைத்துக் கொள்ள கறிவேப்பிலை பயன்படுகிறது. எனவே சர்க்கரை நோயாளிகள் சர்க்கரையை காட்டுக்குள் வைத்திருக்க கறிவேப்பிலை மிகச்சிறந்த ஓர் இயற்கை மருந்தாகும்.

உடலில் வெளிக்காயங்கள் அல்லது புண்கள் ஏற்படும்போது, அந்த காயங்களின் மேலே கருவேப்பிலையை வைப்பது அக்காயங்களினால் தொற்று ஏற்படுவதை தடுக்கும்.

ரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பின் அளவை குறைத்து நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்க கருவேப்பிலை உதவுகிறது. கறிவேப்பிலையில் உள்ள ஃபோலிக் அமிலம் நமது உடலில் உள்ள எலும்புகளை வலுப்படுத்த மிகவும் உதவுகிறது.



# சீனாவுக்கு எதிரான நிழல் யுத்தத்திற்கே இலங்கை அரசு தயாராக இருக்க வேண்டும் – சிறுபான்மை இனத்திற்கு எதிராக அல்ல



இன்று மதவாதம். இனவாதம். தேசியவாதம் என்ற ரீதியிலே நாட்டினுடைய அரசியல் சென்று கொண்டிருக்கின்றது. மதவாதம் இனவாதத்தை பொறுத்தவரையிலும் ஒரு பாராளுமன்ற தேர்தலுக்காக கூடுதலான அரசாங்கங்கள் பயன்படுத்துவது வழமையானதொன்று. ஆனாலும் தற்பொழுது முஸ்லிம் தரப்பை பார்க்கும் பொழுது அவர்கள் கூடுதலாக மதவாதத்தை பயன்படுத்தி இந்த நாட்டிலே ஒரு கலவரத்தை உருவாக்குவதற்கான சில முயற்சிகளை முஸ்லிம் காங்கிரசில் இருப்பவர்களும் அல்லது ரிஷாட் பதியூதினுடைய கட்சியை சார்ந்தவர்களும் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் காங்கிரஸ் இப்படியெல்லாம் அவர்கள் ஒவ்வொரு போக்கிலே இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் ஒரு கூட்டம் இருக்கும்பொழுது மறுபக்கத்தில் தாங்கள் ரிஷாட் பதியூதினூடாகவோ ரவூப் ஹக்கீம் ஊடாகவோ தாங்கள் தெரிவு செய்யப்படவில்லை எங்களுக்கு மக்கள் தான் வாக்களித்தார்கள் என்று தற்பொழுது கூறுகின்ற சூழல் உருவாகியிருந்தது. அது அவர்கள் அரசியலுக்காக போடுகின்ற ஒரு நாடகம். இதிலே காபீர் நஷீர் அவர்கள் ஒரு விடயத்தை கூறியிருந்தார் சாணக்கியனுக்கும் அவருக்கும் இடையிலான ஒரு கிழக்கு மாகாணம் தொடர்பிலே பிள்ளையானுடன் இணைந்து காணி சுபீகரிக்கின்ற நடவடிக்கையில் நாடகம் ஆடுகின்றார்கள் என்று சாணக்கியன் அவர்கள் கூறியதற்கு காபீர் நஷீர் அவர்கள் கடுமையானதொரு வாதத்தையும் தன்னுடைய வாதபிரதிவாதத்திற்கு வருமாறும் கூறியிருந்தார். எது எவ்வாறிருப்பினும் அது சாணக்கியனுக்கும் அல்லது காபீர் நஷீருக்கும் இருக்கக்கூடிய பிரச்சனைகள். பொதுவாகவே கிழக்கை பொறுத்தவரையிலே கிழக்கினுடைய பிரச்சனை பலவாறு இருக்கின்றது.

இன்று பார்க்கும் பொழுது மதத்தீவிரவாதம் அங்கு இருக்கின்றது. காத்தான்குடி ஓட்டமாவடி அக்கரைப்பற்று பொத்துவில் ஏறாவூர் போன்ற இடங்களிலே இந்த பிரச்சனைகள் இருக்கின்றது. ஏனென்றால் கடந்த காலத்தில் ஹிஸ்புல்லாவின் நடவடிக்கைகள் காத்தான்குடியில் அவர் ரெலிகொம் அமைச்சராக இருந்தபொழுது பல்வேறு தரப்பட்ட பிரச்சனைகளை ஜகாத் என்ற போர்வையிலே தமிழ் மக்களுடைய பிரதேசங்களை அழிக்கின்ற ஆக்கிரமிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். எனவே இங்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்தகாலகட்டத்தில் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கிவந்தபொழுதும் தமிழ் மக்கள் பிரச்சனைகளை பார்க்கின்ற பொழுது அங்கு ஒருகாலத்தில் அஷ்ரப் அவர்கள் இருந்ததற்கு முற்பட்ட காலத்தில் புட்டுக்குலுக்குல் தேங்காய்ப்பூவைப்போன்று முஸ்லிம்களும், தமிழர்களும் வாழ்ந்து வந்தார்கள் என்று கூறப்படுகின்றது. உண்மையில் அஷ்ரப்பின் காலத்தை வரவேற்கின்றோம் அவர் அந்த காலகட்டத்திலே சிறப்பாக செயற்பட்டார். ஆனால் அங்கு இருக்கக்கூடியவர்கள் ஊர்காவற்படை என்ற பெயரிலே வீடு வீடாக புகுந்து வெட்டினார்கள், கொலை செய்தார்கள் இவற்றையெல்லாம் சாணக்கியனிடம் கூட ஒரு நேர்காணலில் கேட்ட பொழுது அவற்றை மறந்துவிடுவோம் என்று கூறினார். கல்முனையில் 40 வீடுகள் அழிக்கப்பட்டது, அதுபோன்று 15க்கும் மேற்பட்ட இந்துக்கோவில்கள் எரிக்கப்பட்டது. பல கிராமங்கள் அழிக்கப்பட்டு 1000க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஊர்காவற்படையை வைத்திருந்தது கடந்த காலத்திலே மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தான். 1990களை எடுத்துக்கொண்டால் மட்டக்களப்பிலே என்ன நடந்தது என்று சொல்வதற்கு பலர் இருந்தார்கள். அந்த அழிவை யாராலும் ஈடுசெய்ய முடியாது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்படுவதற்கு முன்னரான காலகட்டங்களில் முஸ்லிம் அரசியல்வாதிகளும் அரசியல் தலைமைகளும் அரசாங்கத்துடன் கைகோர்த்து தமிழினத்தை அல்லது தமிழ் மக்களுடைய போராட்டத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்கள். இந்த நாடு முஸ்லிம்களுடைய நாடு அல்லது பௌத்தர்களுடைய நாடு என்று கூறுகின்ற ஆதாரபூர்வமாக நிரூபித்துக்காட்டுகின்ற எந்த ஒரு அரசியல்வாதியும் நேரடியாக தினப்புயல் களம் உங்களுக்கு களம் அமைக்கின்றது நேரடி விவாதத்திற்கு அழைக்கின்றோம். முடிந்தால் இது உங்களுடைய நாடு முஸ்லிம்களுக்கு சொந்தமானது அல்லது சிங்களவர்களுக்கு சொந்தமானது என்று எந்த ஞானசார தேரராக இருக்கலாம் அல்லது யாராகவேனும் இருக்கலாம் இந்த நாட்டின் ஜனாதிபதியாக கூட இருக்கலாம் இதுவொரு ஈழதேசம் இதற்கு குமரிக்கண்டம் என்று இன்னுமொரு பெயர் இருக்கின்றது. கல் தோன்றா மண் தோன்றா காலத்தில் உருவாக்கப்பட்டதொன்று தான் இந்த தேசம். சிவ வழிபாடு என்பது உலக நாடு முழுவதிலும் இருந்தது.

இன்று எத்தனையோ அகழ்வாராய்ச்சியில் சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றது. சிவ வழிபாட்டை அழிப்பதற்காகத்தான் கிறிஸ்தவர்கள் படையெடுத்து இந்த நாட்டிற்கு வந்தார்கள். இதற்கொரு வரலாறு இருக்கின்றது. இயக்கர் நாகர் வேடர் யார் என்பது பற்றியும் அலசி ஆராயக்கூடிய சந்தர்ப்பங்களை உங்களுக்கு தருகின்றோம். இதுவொரு வரலாற்று ரீதியாக இருப்பதாக இருந்தாலும்சரி இன்று அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் அரசியல்வாதிகள் அமைச்சர்கள் அனைவரும் தங்களுடைய சுபபோக வாழ்க்கையை அமைத்துவிட்டு மக்களின் நலனில் அக்கறை இல்லாது செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். கிழக்கை பொறுத்தவரையில் வடக்கில் அது பற்றி பேசுவதில்லை சொல்வதில்லை கிழக்கில் கருணா பிள்ளையான் பிரிவடைந்த காலகட்டத்திலும் அதற்கு முன்னரும் என்ன நடந்தது அஷ்ரப்பை திட்டமிட்டு கொன்றது கடந்த கால அரசாங்கம். சந்திரிக்காவினுடைய அரசு தான் அவரை திட்டமிட்டு கொன்றது திட்டமிட்டு கொன்ற மறுகணமே அஷ்ரப் அவர்கள் அரசாங்கத்துடன் முன்டுகொடுத்து இணைந்துகொண்டிருந்தார்.

எனவே இவற்றையெல்லாம் முஸ்லிம்கள் பார்க்க வேண்டும். இன்று தமிழ் மக்கள் உங்களுக்கு எதிராக 40 வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. இதுவரையிலே நூற்று கணக்கான வன்முறைகள் மறைமுகமாக கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றன. சில பள்ளிவாசல்கள் உடைத்திருக்கின்றார்கள் ரிஷாட் பதியூதின் அவர்களை பிடித்து சிறையில் அடைக்கின்றார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தில் கொண்டு செல்கின்றார்கள் கடந்தகாலத்தில் அரசாங்கத்துடன் கைகோர்த்து நல்ல நிலையில் இருந்தவர்கள் இவர்கள் அனைவரும். ஆகவே இப்படியெல்லாம் இவர்கள் இருந்தபொழுது தற்பொழுது சஹ்ரானின் குண்டுத்தாக்குதலை வைத்து முஸ்லிம் மக்களை குறைகூற வரவில்லை. இங்கிருக்கும் ஜிகாத் அமைப்பு போன்று தீவிரபோக்குடையவர்கள் பலர் இருக்கின்றார்கள். இன்று அரசியல்வாதிகள் கூடுதலாக இனவாதத்தை மதவாதத்தை தீவிரவாதத்தை தான் தங்களுடைய அதிலே பரப்பிவருகின்றார்கள் என்பதை கண்ணூடாக காணக்கூடியதாக இருக்கின்றது.

பாராளுமன்றத்தில் வாய்கிழிய கத்துகின்ற தமிழ் அரசியல் தலைமைகளும் சரி அல்லது கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற முஸ்லிம் அரசியல் தலைமைகளும் வரலாறு தெரியாதவர்களுக்கு நீங்கள் பாடம்புகட்டுவதாக இருக்கக்கூடாது. ஏனென்றால் இன்று தமிழ் பரப்பிலும் நாங்கள் பல விடயங்களை கூற வேண்டிய தேவை இருக்கின்றது. கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியில் பயில்வான் என்ற பிரச்சனை வந்தபொழுது அந்தகளத்திலே நாங்கள் நின்றவர்கள். பல முஸ்லிம்களை அந்த இடத்திலிருந்து காப்பாற்றியவர்கள் நூற்றுக்கணக்கான முஸ்லிம்களுக்கு நாங்கள் அடைக்களம் கொடுத்து மட்டக்களப்பிலே கருவப்பங்கேணி மற்றும் முகத்துவாரங்களில் ரவூப் ஹக்கீம் பிரதேசத்தில் இவ்வாறெல்லாம் அடைக்களம் கொடுத்து காப்பாற்றி வைத்திருந்தோம். முஸ்லிம்களுக்கு இடையிலே பல பிரச்சனைகள் இருந்தது. பயில்வானுடைய பிரச்சனை நடந்தபொழுது பேரூந்துகளை எரித்து மற்றும் அனைத்தையும் உடைத்து எறிந்தார்கள். சுருவ வழிபாடுகளை மேற்கொள்கின்ற முஸ்லிம்களும் காத்தான்குடியிலே இருக்கின்றார்கள். அவர்களுக்குள்ளும் பிரச்சனைகள் இருக்கின்றன. சஹ்ரானை வளர்த்து எடுத்தது எல்லாம் காத்தான்குடியில் இருந்து தான். காத்தான்குடியிலே பிரதானமாக ஹிஸ்புல்லா அவர்கள் அதற்கு துணைபோயிருந்தார். ஹிஸ்புல்லா அவர்கள் போர்முனையிலே தமிழ் மக்களை நீராவோடையிலே வாழைச்சேனை பிரதேசங்களிலே பொதுவாக இராணுவத்திடமிருந்து அக்காலகட்டத்தில் செயற்பட்டவர். எங்களுக்கு நன்கு தெரியும் நாங்கள் பல தடவைகள் அவரை எதிர்கொண்டிருக்கின்றோம். நாங்கள் எதிர்கொண்ட வகையிலே ஆதாரபூர்வமாக பல விடயங்களை கூறுகின்றோம்.

காத்தான்குடியில் பயில்வானுடைய பிரச்சனை இடம்பெறுகின்ற பொழுது ரெலிக்கொம்மில் இருந்து ஹிஸ்புல்லா அவர்களை நேரடியாக ஒரு நேர்காணலை நான் எடுத்திருக்கின்றேன். அந்த சண்டை இடம்பெற்றுக்கொண்டிருந்த கட்டத்திலே இறுதியாக அங்கிருந்து நாங்கள் வரமுடியாத ஒரு சூழலிலே அவருடைய வாகனத்தில் ஏற்றி வன்னியன்தொழுவாய் ரயிலில் விட்டார்கள் அதில் நாங்கள் மறுபடியும் இங்கு வந்துவிட்டோம். சில விடயங்களை கூறமுடியாது ஆனாலும் யார் அந்த தீவிரவாத போக்கை தூண்டினார்கள் எதற்காக தூண்டினார்கள் என்று எல்லாம் எங்களுக்கு தெரியும். எனவே இங்கு சாணக்கியனுடன் வாதிடுவோ தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் அரசாங்கத்துடன் மோதுகின்றீர்களா அரசாங்கத்துடன் என்ன மோதலை மோதுகின்றீர்கள் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் அதிலும் டட்லி சேனாநாயக்க தொடக்கம் கோட்டபாய ராஜபக்ச வரையிலும் நீங்கள் எந்த போராட்டத்தை அரசாங்கத்திற்கு எதிராக போராடுகின்றீர்கள். வெறுமனே அரசாங்கத்துடன் டக்ளஸ் தேவானந்தா. கருணா. பிள்ளையான். அங்கஜன் இராமநாதன் இவர்களை போன்று ஒத்து ஊதுகின்ற ஒரு நடவடிக்கைகளில் நீங்களும் ஈடுபடுவதன் ஊடாக இன்று ரிஷாட் பதியூதின் அவர்களுக்கு ஒரு தெளிவு வந்தபொழுது அதிலிருக்கும் 4 பேரும் சென்று அரசாங்கத்திற்கு வக்காளத்து வாங்குகின்ற நிலைமையாக முஷாரப் உட்பட பலரும் சென்றிருக்கின்றார்கள். இதுவொரு கேவலம் கெட்ட அரசியலாக காணமுடிகின்றது.

ஆகவே மக்கள் மக்கள் என்று கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றுகின்ற சக்திகளாக நீங்கள் செயற்படக்கூடாது. இன்று அமைச்சர்களாக இருக்கின்றவர்கள் அல்லது அரசாங்கம் மாறி மாறி வந்துவிட்டால் அந்த அரசாங்கம் மக்களுக்கு உதவி செய்யத்தான் வேண்டும். அதிலிருக்கின்ற அமைச்சர் செய்யத்தான் வேண்டும். அமைச்சர் தன்னுடைய செலவில் செய்துவிட்டுபோகவில்லை. அவர் ஒரு அரச இயந்திரம். எந்த அமைச்சராக இருந்தாலும் தன்னுடைய கடமையை செய்துவிட்டு போகவேண்டியதுதான். மக்கள் வரிப்பணத்தில் தான் இந்த நாடு இயங்கிக்கொண்டிருக்கின்றது. எனவே இந்த நாட்டினுடைய பொருளாதாரம் ஒரு கேள்விக்குறியாக இருக்கின்ற கட்டத்திலே இவர்கள் எங்கெங்கெல்லாம் பிரச்சனைகளை மூட்டிவிட்டு சுயநலமான ஒரு அரசியலை கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகளை செய்வதற்காக இந்த முஸ்லிம் தரப்பினர் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதே நேரம் தமிழ் தரப்பை பொறுத்தவரையிலே கூடுதலாக சாணக்கியம் அவர்கள் சுமந்திரன் அவர்கள் பாராளுமன்றத்தில் ஏதேனும் பேசிவிட்டால் தீவிரவாதமாக பேசுகின்றார்கள் அல்லது அவர்கள் அரசாங்கத்துடன் ஒத்து ஊதுகின்றார்கள் என்ற நிலைப்பாடுதான் அதிகமான தரப்பினரிடமிருந்து வருகின்றது. இதனை யார் செய்வது அதாவது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதாவது தாங்கள் தான் தமிழ் மக்களுடைய தேசியவாதிகள் என்று கூறுகின்றார்கள். அதே நேரம் தமிழ் கட்சிகள் தாங்கள் தான் தேசியவாதிகள் என்று கூறுகின்றார்கள். தாங்கள் தான் தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமைக்காக போராடுகின்றவர்கள் என்று கூறுகின்றார்கள். இவர்கள் எவ்வாறு கூறினாலும் தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் முஸ்லிம்களும் தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து அரசாங்கத்துடன் ஒத்து ஊதாமல்வருகின்ற பொழுது 35 ஆசனங்களை கைப்பற்றக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்து. அப்படியிருந்தால் தொடர்ந்தும் தமிழ் தரப்பு எதிர்கட்சியாக இருக்கின்ற வாய்ப்புக்கள் இருக்கின்றது. அந்த நிலவரத்தை நாங்கள் உருவாக்கிக்கொள்வதற்கு ஏன் தயங்குகின்றோம்.

தற்பொழுது சிங்கள பெரும்பான்மையினால் தாங்கள் தொடர்ந்தும் வெற்றி பெறுவோம் என்ற மமதையிலே இந்த அரசாங்கம் இருக்கின்றது. கடந்த காலத்தில் அவ்வாறில்லை. தமிழ் தரப்போடு அல்லது முஸ்லிம் தரப்போடு ஒரு ஒப்பந்தத்தை செய்துகொள்வார்கள். கலகொடஞானசார தேரரைப்போன்று பலரை வைத்து போலித்தேர்தல்களை வைத்து இந்த நாட்டிலே ஒரு மதவாதத்தை உருவாக்குகின்றார்கள். மதவாதம் எங்கு தலைதூக்குகின்றதோ அங்கு ஆயுதப்போராட்டம் நிச்சயம் உருவாகும். தற்பொழுது இலங்கை அரசாங்கம் கடன் நெருக்கடிக்குள் சீனாவிடம் மண்டியிட்டிருக்கின்றது. அல்லது சீனாவிற்கு கொத்தடிமையாக இருக்கின்றது.

தொடரும்...

நெற்றிபொறியன்

# விளையாட்டு செய்திகள்

## மார்ச் மாதம் வரை விளையாட மாட்டேன்...

மற்றொரு அறுவை சிகிச்சை காரணமாகப் பிரபல இங்கிலாந்து வீரர் ஜோஃப்ரா ஆர்ச்சர் மார்ச் மாதம் வரை விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத் தொடக்கத்தில் இந்தியாவுக்கு எதிரான இரு டெஸ்ட், 5 டி20 ஆட்டங்களில் விளையாடிய ஜோஃப்ரா ஆர்ச்சர், வலது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக நாடு திரும்பினார்.

பிறகு ஐபிஎல் 2021 போட்டியிலிருந்தும் விலகினார். காயத்திலிருந்து மீண்டு வந்த ஆர்ச்சர், சஸ்ஸெக்ஸ் அணிக்காக விளையாடினார். பிறகு, முழங்கை காயத்தில் மீண்டும் வலி ஏற்பட்டதால் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து விலகினார். கடந்த மே மாதம் முழங்கை காயத்துக்காக அறுவை சிகிச்சை செய்துகொண்டார். இதனால் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர், டி20 உலகக் கிண்ண ஆஷஸ் தொடர் ஆகிய முக்கியமான போட்டிகளிலிருந்து அவர் விலகினார்.

இந்நிலையில் முழங்கை காயத்துக்கு மற்றொரு அறுவை சிகிச்சை மேற்கொண்டுள்ளார் ஆர்ச்சர். இதையடுத்து ஜனவரி - மார்ச் மாதங்களில் இங்கிலாந்து அணியின் மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணத்திலும் ஆர்ச்சர் இடம்பெற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 11 அன்று லண்டனில் ஆர்ச்சருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

ஐபிஎல் போட்டியில் ராஜஸ்தான் அணி ஆர்ச்சரைத் தக்கவைக்கவில்லை. 2 வது அறுவை சிகிச்சை காரணமாக ஐபிஎல் 2022 போட்டியில் ஆர்ச்சர் பங்குபெறுவாரா என்பது இனிமேல் தான் தெரியவரும்.

ஜனவரி - மார்ச் மாதங்களில் இங்கிலாந்து அணி, மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து 5 டி20, 3 டெஸ்டுகளில் விளையாடுகிறது. டி20 தொடர் ஜனவரி 22 முதல் ஜனவரி 30 வரை நடைபெறுகிறது. டெஸ்ட் தொடர், மார்ச் 1 முதல் மார்ச் 28 வரை நடைபெறுகிறது.



## வீர, வீராங்கனைகள் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வோர் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளும்படி சீன அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவ்வாறு செய்யத் தவறுவோர் தங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். தடுப்பூசியைப் போட்டு முடித்திருப்போர், booster எனும் கூடுதல் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளுமாறு அதிகாரிகள் ஊக்குவிக்கின்றனர்.

விளையாட்டுகளின் திருத்தப்பட்ட கட்டுப்பாடுகளின் ஒருபகுதியாக அந்தப் புதிய விதிகள் அமைந்துள்ளன. அவற்றின்கீழ், போட்டி அதிகாரிகள் முகக்கவசங்களை எந்நேரமும் அணிந்திருக்க வேண்டும்.

விளையாட்டுகளின் தொடர்பான மருத்துவப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு மருத்துவமனைகளில் தனிப்பிரிவுகள் ஒதுக்கப்படும்.

சுகாதார ஊழியர்கள், மருத்துவ நிபுணர்கள் என நூற்றுக்கணக்கானோர் பணியில் அமர்த்தப்படுவர்.




## பிரபல விளையாட்டு வீரருக்கு கொரோனா..

பிரபல டென்னிஸ் வீரர் நடால் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை 20 முறையும் பிரெஞ்சு ஓபன் பட்டத்தை மட்டும் 13 முறையும் வென்றவர் நடால். 2021 பிரெஞ்சு ஓபன் அரையிறுதிச் சுற்றில் ஜோகோவிச்சிடம் வீழ்ந்தார். விம்பிள்டன், டோக்கியோ ஒலிம்பிக்ஸ், யு.எஸ். ஓபன் என முக்கியமான போட்டிகளில் இருந்து விலகினார். காலில் ஏற்பட்ட காயம் காரணமாக 2021 ஆம் பருவத்தை முடித்துக்கொள்வதாகக் கடந்த ஆகஸ்ட் மாதம் நடால் அறிவித்தார்.

நான்கு மாதம் கழித்து அபுதாபியில் நடைபெற்ற காட்சிப் போட்டி ஒன்றில் கலந்துகொண்டார் நடால். காயம் காரணமாக அவுஸ்திரேலிய ஓபன் போட்டியில் கலந்துகொள்வது பற்றி உறுதியாகத் தெரிவிக்க முடியாது என்று கூறினார்.

இந்நிலையில் அபுதாபியிலிருந்து ஸ்பெயினுக்குத் திரும்பிய நடால், தனக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது: குவைத், அபுதாபியில் இரு நாள்களுக்கு ஒருமுறை கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது எனக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை.

அபுதாபி போட்டி முடிந்த பிறகு ஸ்பெயினில் எடுக்கப்பட்ட பரிசோதனையில் எனக்கு கொரோனா பாதிப்பு உறுதியாகியுள்ளது. போட்டிகளில் கலந்துகொள்வது பற்றி விரைவில் தகவல் தெரிவிக்கிறேன் என்று கூறியுள்ளார்.



## 19 வயதில் முச்சதம் அடித்து பாகிஸ்தான் வீரர் ஹீரைரா சாதனை

பாகிஸ்தானின் முன்னாள் ஜாம்பவான் ஜாவேத் மியாண்டட்டுக்குப் பிறகு முதல்தரப் கிரிக்கெட் போட்டிகள் வரலாற்றில் முச்சதம் அடித்த இரண்டாவது இளம் வீரர் என்ற பெருமையை மொஹமட் ஹீரைரா பெற்றுக்கொண்டார்.

பாகிஸ்தானில் நடைபெற்று வரும் குவைட் ஈ அசாம் கிண்ணத்துக்கான முதல்தர கிரிக்கெட் தொடரில் நொதர்ன் அணிக்காக அறிமுகத்தைப் பெற்று விளையாடி வருகின்ற 19 வயதான ஹீரைரா, 327 பந்துகளில் முச்சதம் அடித்து சாதனை படைத்தார்.

முன்னதாக 1975ஆம் ஆண்டு ஜாவேத் மியாண்டட் நெஷனல் வங்கிக்கு எதிரான போட்டியில் 311 ஓட்டங்களை எடுத்து இளம் வயதில் முச்சதம் அடித்த முதலாவது பாகிஸ்தான் வீரராக வரலாற்றில் இடம்பிடித்தார். அப்போது மியாண்டடுக்கு வயது 17 ஆகும்.

இதனிடையே, பாகிஸ்தான் மண்ணில் பெறப்பட்ட 23ஆவது முச்சதமாகவும், பாகிஸ்தான் வீரர் ஒருவரால் பெற்றுக்கொண்ட 18ஆவது முச்சதமாகவும் இது இடம்பிடித்தது. அதேபோல, சர்வதேச அரங்கில் இந்த மைல்கல்லை எட்டிய 8ஆவது வீரராகவும் அவர் இடம்பிடித்தார்.

இந்த பருவத்தில் மட்டும் 16 போட்டிகளில் விளையாடி ஹீரைரா, 878 ஓட்டங்களைக் குவித்து அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர்களில் இரண்டாவது இடத்தில் உள்ளார். இதில் 3 சதங்களும், 3 அரைச்சதங்களும் அடங்கும்.

பலொசிஸ்தான் அணிக்கெதிரான இந்தப் போட்டியில் 311 ஓட்டங்களை 340 பந்துகளில் எடுத்த மொஹமட் ஹீரைரா, 40 பௌண்ட்ரிகள் மற்றும் 4 சிக்ஸர்களையும் விளாசினார்.

குறித்த போட்டியில் பலொசிஸ்தான் அணியை வீழ்த்தி நொதர்ன் அணி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

பாகிஸ்தானின் சியல்கோட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், பாகிஸ்தானின் நட்சத்திர வீரர் சொஹைப் மலிக்கின் மருமகன் ஆவார்.

பாகிஸ்தான் அணியில் தற்போது விளையாடி வருகின்ற இளம் வீரர் ஹைதர் அலியுடன் பாகிஸ்தான் 19 வயதின்கீழ் அணியில் சக வீரராக மொஹமட் ஹீரைரா விளையாடி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# உலக பார்வை



## படகு விபத்துகளில் 164 அகதிகள் பலி

லிபியா அருகே நேரிட்ட இரு படகு விபத்துகளில் 164 பேர் பலியாகினர். இதுகுறித்து சர்வதேச புலம்பெயர்வோர் நல அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சஃபா சேலி செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

லிபியா அருகே அகதிகளை ஏற்றிச் சென்ற இரு படகுகள் கடந்த வாரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகின. லிபியாவையொட்டிய கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்த மரப் படகு கடந்த வெள்ளிக்கிழமை விபத்துக்குள்ளானது. இதில் 102 அகதிகள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். 3 நாள்கள் கழித்து, மற்றொரு படகு விபத்தில் பலியான 62 அகதிகளின் சடலங்களை லிபியா கடலோரக் காவல் படையினர் மீட்டனர்.

இதுதவிர, 210 அகதிகளுடன் வந்து கொண்டிருந்த மற்றொரு படகு இடைமறிக்கப்பட்டு, மீண்டும் லிபியாவுக்கே திருப்பி அனுப்பப்பட்டது.

கடந்த வாரம் உயிரிழந்தவர்களையும் சேர்த்து, மத்திய தரைக்கடல் பகுதியில் இந்த ஆண்டு ஏற்பட்ட படகு விபத்துகளில் உயிரிழந்த அகதிகளின் எண்ணிக்கை சுமார் 1,500-ஆக அதிகரித்துள்ளது என்றார் அவர்.



## ஹெலிகொப்டர் விபத்து: கடலில் குதித்து 12 மணி நேரம் நீந்தி உயிர் பிழைத்த மடகாஸ்கர் அமைச்சர்

மடகாஸ்கரில் ஹெலிகொப்டரில் பயணித்த போது ஏற்பட்ட திடீர் விபத்தால் கடலில் குதித்து 12 மணி நேரம் நீந்தி அமைச்சர் ஒருவர் உயிர் பிழைத்துள்ளார்.

ஆப்பிரிக்க கண்டத்தின் தென்கிழக்கே இந்திய பெருங்கடலிலுள்ள தீவு நாடான மடகாஸ்கரின் வடகிழக்கு கடற்கரை அருகே கடந்த 19 ஆம் திகதி 130 பயணிகளுடன் பயணித்த கப்பல் திடீரென கவிழ்ந்து விபத்திற்குள்ளானது. இதில் 39 பேர் உயிரிழந்தனர். 68 பேரை காணவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த கப்பல் விபத்து நிகழ்ந்ததும் மீட்புப் பணியில் ஈடுபட சென்ற மீட்புப்படையுடன் அந்நாட்டின் அமைச்சர் Serge Gelle-வும் ஹெலிகொப்டரில் சென்றார். அப்போது திடீரென ஹெலிகொப்டர் விபத்திற்குள்ளானதில், அமைச்சர் கடலில் குதித்து 12 மணி நேரம் நீந்தி மஹாம்போ என்னும் தீவை அடைந்து உயிர் பிழைத்திருக்கிறார்.

57 வயதான இவர் முன்னாள் பொலிஸ் அதிகாரி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ட்விட்டரில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளனர். இதில் அமைச்சர், 'திங்கள் கிழமை மாலை 7.30 மணிக்கு ஆரம்பித்த நீச்சல் மறுநாள் காலை 7.30 வரை நீடித்தது. பின் மஹாம்போ தீவை அடைந்தேன். நான் இறப்பதற்கான நேரம் இன்னும் வரவில்லை' என தெரிவித்திருக்கிறார்.



## நான்காவது டோஸ் தடுப்பூசி வழங்கிய இஸ்ரேல்

நான்காவது டோஸ் தடுப்பூசியை வழங்கிய முதல் நாடாக இஸ்ரேல் பதிவாகியுள்ளது.

Omicron தொற்று அதிகளவில் பரவி வரும் நிலையில், அதனை கட்டுப்படுத்தும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 60 வயதிற்கு மேற்பட்டோருக்கும் சுகாதார ஊழியர்களுக்கும் 04 ஆவது டோஸ் தடுப்பூசியை வழங்க தீர்மானித்துள்ளதாக இஸ்ரேல் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் தொற்றுநோயியல் தொடர்பான நிபுணர்கள் குழுவினால் எடுக்கப்பட்ட இந்த தீர்மானத்தை, அந்நாட்டு பிரதமர் Naftali Bennett வரவேற்றுள்ளார்.

## 'வெட்கக்கேட்டின் சின்னம்' என அழைக்கப்படும் தூபி அகற்றப்பட்டது

ஹொங்கொங் பல்கலைக்கழகத்தில் Tiananmen சதுக்க படுகொலையை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டிருந்த தூபி அகற்றப்பட்டுள்ளது.

8 மீட்டர் உயரம் கொண்ட குறித்த செப்புத் தூபி இரவோடு இரவாக கட்டுமானத் தொழிலாளர்களால் அகற்றப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு ஜனநாயக ஆதரவாளர்கள், சீனப் படையினரால் கொல்லப்பட்ட நிகழ்வை நினைவுகூரும் இந்த தூபி 'வெட்கக்கேட்டின் சின்னம்' என அழைக்கப்பட்டது.

உயிரற்ற உடல்கள் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளதை காட்டும் இந்த சின்னம் சிலை போல வடிக்கப்பட்டிருந்தது.

இந்த நினைவுச் சின்னத்தை அகற்றுமாறு கடந்த ஒக்டோபர் மாதத்தில் ஹொங்கொங் பல்கலைக்கழகத்திற்கு உத்தரவிடப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.



## ஜப்பான் கடல் எல்லைக்குள் நுழைந்த சீனப் படகுகள்

சீனாவின் இரண்டு ரோந்துக் கப்பல்கள் ஜப்பான் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்துள்ளதாக கூறப்படுகின்றது.

சர்ச்சைக்குரிய சென்காகு தீவுகளுக்கு அருகே ஜப்பானின் கடல் எல்லைக்குள் சீன ரோந்துக் கப்பல்கள் பிரவேசித்துள்ளமையினை உள்ளூர் ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

குறித்த தீவுகளுக்கு அருகிலுள்ள பகுதிகளை ஜப்பான் தங்களின் சொந்தப் பிரதேசம் என கூறுகின்றன. இதன்காரணமாக அதற்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாக ஜப்பானின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்.

எனினும், குறித்த கடல் எல்லையின் அடுத்தடுத்த பகுதியில் சீனாவின் இரண்டு கப்பகள் பிரவேசித்துள்ளன.

ஆசிய பொருளாதாரத்தில் சக்தி மிக்க நாடுகளான ஜப்பான், சீனா ஆகியன சென்காகு தீவுகள் மீது பிராந்திய உரிமைகளை நீடித்துள்ளன. ஜப்பான் தீவுகளின் மீது அதன் இறையாண்மையை வலியுறுத்துகிறது.

ஜப்பானின் உரிமம் கோரும் விடயமானது, 1895 முதல் நடைமுறையில் உள்ளது. அதேநேரத்தில் சீனா தரப்பு, 1783 மற்றும் 1785இல் வெளியான வரைபடங்களை சுட்டிக்காட்டி தீவுகளை சீனப் பிரதேசமாக குறிப்பிடுகிறது.

2012இல் ஜப்பானிய அரசாங்கம் ஐந்து தீவுகளில் மூன்றைத் தனியார் உரிமையாளரிடமிருந்து வாங்கியபோது இந்தச் சர்ச்சை மேலும் அதிகரித்து தற்போது பதற்ற நிலைமையை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு அயர்லாந்தில் இரவு விடுதிகள் டிசம்பர் 26ஆம் திகதி முதல் மூடல்!

வடக்கு அயர்லாந்தில் இரவு விடுதிகள் 06:00 மணி முதல் மூடப்பட வேண்டும் மற்றும் உட்புறத்தில் நிற்கும் நிகழ்வுகள் தடைசெய்யப்படும்.

அப்போதிருந்து, விருந்தோம்பல் இடங்களில் நடனமாடுவதும் தடைசெய்யப்படும், ஆனால் இது திருமண நிகழ்வுகளுக்குப் பொருந்தாது.

டிசம்பர் 27ஆம் திகதி முதல், விருந்தோம்பல் அரங்குகள் டேபிள் சேவைக்கு மட்டுமே திரும்பும். ஆறு பேருக்கு மேல் ஒரு மேசையில் ஒன்றாக அமர அனுமதிக்கப்படக்கூடாது.

தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து வடக்கு அயர்லாந்தில் தற்போது அதிக எண்ணிக்கையிலான கொவிட் தொற்றுகள் பதிவாகி வருகின்றன.

வடக்கு அயர்லாந்தில் இப்போது ஒமிக்ரோன் கொவிட் தொற்று, கிட்டத்தட்ட 60 சதவீத தொற்றுகளை உருவாக்குகிறது.

விளையாட்டு நிகழ்வுகள் திறன் வரம்பு இல்லாமல் தொடரலாம் ஆனால் இது டிசம்பர் 30ஆம் திகதி மதிப்பாய்வு செய்யப்படும்.

## வவுனியா அபிஷா வைத்தியசாலையில் PCR பரிசோதனைகள் செய்து கொள்ளலாம்




## மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் அவர்களின் 16வது நினைவாண்டு




தமிழ் தேசியக் கூட்டமைப்பு
நாடாளுமன்ற உறுப்பினர்

## அமரர்
## ஜோசப் பரராஜசிங்கம்

ஸ்ரீ லங்கா புலனாய்வுப் பிரிவினர் திட்டமிட்ட தாக்குதலில் சாவினை தழுவிக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் 16வது நினைவாண்டினை தினப்புயல் பத்திரிகை பகிர்ந்துகொள்கிறது.




## 40அடி உயரத்தில் பட்டத்தில் தொங்கிய இளைஞன்

பட்டம் விட்ட இளைஞனரை சுமார் 40 அடி உயரத்துக்கு பட்டம் தூக்கிச் சென்ற சம்பவம் ஒன்றின் காணொளி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றது. பருத்தித்துறை – புலோலி பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இளைஞர்கள் பலர் கூடி அந்தப் பகுதியில் பெரிய பட்டம் ஒன்றை பறக்க விட்டனர். பின்னர் அந்தப் பட்டத்துடன் இன்னொரு பட்டத்தை இணைத்து விடுவதற்கு முனைந்தனர்.

அப்போது, இரண்டாவது பட்டத்தின் 'முச்சை' கயிற்றை பிடித்திருந்தவரும், முதல் பட்டத்தின் பறப்பு வேகத்தில் பறக்க ஆரம்பித்தார். சுமார் 40 அடி உயரம் வரை பறந்தவரை கீழிறக்க முடியாமல் இளைஞர்கள் திணறினர். சுமார், 5 நிமிடங்கள் பறந்த நபர் சுமார் 20 அடிவரை கீழிறங்கிய பின்னர் கையை விட கீழே விழுந்துள்ளார்.






இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 26.12.2021 அன்று வெளியிடப்பட்டது.